ப்பெருக்குகளையும் தொலைக்கமாட்டுவனல்லது அழிவற்ற நமது தேகத்தை அசைக்கமாட்டுவனோ? என்னைப் பாலகன் வெல்வதரிது. நானும் அவனை வெல்வதரிது. இவ்விதச் சங்கடங்கள் இருக்கின்றபடியால் நாம் இப்போதே நமது பட்டணத்துக்குப் போய் நாளைச் சௌகரியங்களுடன் யுத்தத்திற்கு வரவேண்டுமென்று மாயமந்திரத்தினாற் சடுதியில் மறைந்து தன் நகரத்தைச் சேர்ந்தனன்.

இந்தச் சம்பவங்களைக் கண்ட பிரமனாதி தேவர்கள் அடங்காத ஸந்தோஷத்துடன் சிவகுமாரன் முன் வந்து கரங்களைக்கூப்பிப் போற்றிச் சூரனை நிமைப்போதிற் கண்டிக்கவல்ல தேவரீர் அவனுடன் விற்போர் செய்வதானது அவன் பிழைத்துப் போகட்டுமென்னும் பச்சாத்தாபங் கொண்டிருப்பதாகக்காணப்படுகிறது. கிருபைகூர்ந்து அவனை எங்கள் சங்கடங்கள் தீர நாசப்படுத்த வேண்டுமென்று பிரார்த்திக்க, விசாகப்பெருமாள் இனி அவன் யுத்தத்திற்கு வருங்கால் நாம் அவனைப் புத்திர மித்திரருடன் நிர்மூலம் செய்வோமென வரக்களித்தனர்.

இவை நிற்கப் பூதப்படைகளெல்லாம் சூரன் பட்டணத்தின் கோட்டை மதிலை வளைந்து கோபுரவாசலிற் காவலாயிருந்த சேனைகளை யெல்லாம் நாசஞ் செய்யத் தலைப்பட்டன. அது கண்ட அதிகோரனென்னும் அவுணவீரன் எதிர்த்து வர அவனுடன் பூதவீரனாகிய அமோகனென்பவன் எதிர்த்துப் போராடி அவனைக் கொன்றனன். அப்பாற் பூதவெள்ளங்கள் வேகமாய்க் கோபுரவாயிலைக் கிட்டிக் கோபுரத்தை வேருடன் பறித்துப் பந்தைப்போல் எடுத்துக் கடலில் விட்டெறிந்து பின் கோட்டை மதிலையும் இடித்துப் பட்டணத்துக்குள்ளே பிரவேசித்து எதிர்ப்பட்ட இராட்சதர்களை மாய்த்துப் பட்டணத்தையும் அழித்துக் கோபமாறித் திரும்பி நம் சரவணபவனை வந்தடைந்தன. குமாரதேவர், தேவர்கள் சூழச் சகல சயினியங்களுடன் தமது பாசறை வீட்டிற் சேர்ந்திருந்தனர்.

இவை நிற்க, மறைந்துபோன சூரன் தன்நகரைச்சேர்ந்து இதர போகங்கள் யாவற்றையும் வெறுத்துத் தான்பட்ட அவமானங்களை

நினைந்து நினைந்து மனம் வெந்து வாடி உறக்கமற்றுப் பாம்பைப்போல மஞ்சத்திற் படுத்துப் புறண்டிருக்கும்போது, தோல்வியானதைப் பானுகோபன் கேள்விப்பட்டுத் தன் பிதாவினிடம் வந்து அய்யனே! நான் நேற்றுப் பாலசுப்பிரமணியனைத் தவிர மற்றெல்லோரையும் ஜெயித்து இவ்விடத்திற்கு வரவிருந்தபோது பாசறையிலிருந்தபடி சிவகுமாரன் ஒருபாணத்தைத் தூண்டி என்பாணத்தை நிலைகொள்ளாமல் திரும்பி வரச்செய்தான். உடனே சகலரும் ஜீவந்தராய் எழுந்தார்கள். நான் பாசுபதாஸ்திரம் மறுதினம் கொண்டுபோய் அவர்களை ஜெயிப்பதாக எண்ணிவந்து விட்டேன். தேவரீர் ஒன்றுக்கும் கவலை வைக்கவேண்டாம். நானே அந்தப் பாலசுப்பிரமணியனுடன் எல்லாரையும் சின்ன பின்னப்படுத்தி வரவல்லேன். இல்லையாயின் நான் இப்பட்டணத்திற்குத் திரும்பி வரேன். மரவுரி உடுத்துக் காட்டிற்குத் தவஞ் செய்யப் போகக்கடவேனென்று சபதங்கள் பேசிய காலையிற் சூரன் ஸந்தோஷித்து இதனைச் சொல்லுகின்றான். அப்பனே! மற்றவர்களை வெல்வதை நான் பெரிதாக நினைக்கவில்லை. பராக்கிரமசாலியாகிய என் தம்பி தாருகனையும் கிரவுஞ்சனையும் பிளந்து கொன்ற பகைவன் வலியை அழித்து ஜெயங்கொள்வது மிகவும் அரிது! அரிது! அச்சிறுவனை நானே கொல்வேன். நீ வீரவாகு தேவரைக் கொல்ல வேண்டும். இருவரையும் ஜெயித்துவிட்டால் நமக்குப் பின் பகை இல்லை என்றனன். பானுகோபன் அதற்கு இணங்கி மறுநாள் தான் யுத்தத்திற்குப் போவதாய்ப் பிதாவினிடம் வருதி பெற்றுத் திரும்பி வரும்போது சில தூதுவராற் பூதப்படைகள் வீறிவந்து கோபுரத்தைப்பிடுங்கிச் சமுத்திரத்தில் எறிந்து மற்றும் நடத்திய சம்பவங்களனைத்தையும் கேள்விப்பட்டு உக்கிரமான கோபங்கொண்டு உடனே அவைகளைத் திரும்ப நிருமாணிக்க அவன் கட்டளையிட்டுப் பின் தன் பதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

மூன்றும் நாள் பானுகோபன் யுத்தம்.

இவ்விதமாக இராக்காலம் கழிந்து அருணோதயமானவுடன் பானுகோபன் யுத்தத்திற்குச் சிலதகுந்த உதவிகளைத்தேட உத்தேசித்துத் தன் பிதா மகளாகிய மாயையை நினைக்க அவள் உடனே தன்

பேரன் முன் தோன்றினாள். பானுகோபன் அவள் திருவடிகளிற் பணிந்தெழுந்து அடி ஆயா! பாலசுப்பிரமணியனுக்கும் நமக்கும் சண்டை நேர்ந்த காரணத்தால் முந்தையநாள் நான் தோற்க நேரிட்டது. அதினால் எனக்கு உண்டாகிய அவமானம் கொஞ்சமல்ல. உயிரை விட்டாலும் நன்றாயிருக்குமென முறையிட்ட காலையில் அவள் பௌத்திரனே! கெடுமதி கண்ணுக்குத் தோன்றாதென்பது நிச்சயம். அந்தப் பாலசுப்பிரமணியனை நீங்கள் சாமானியமாய் நினைக்கவேண்டாம். உங்களுடைய அக்கிரமத்தால் தேவர்களையும் ரிஷிகளையும் பகைத்துக் கொண்டீர்கள் என்று பலவிதங்களிற் சமாதானமாய்ப் போதித்து அவனுக்குப் புத்திசொல்லியும் கேட்பதாயில்லாததைக் கண்டு மாயை என்னாலானது இதுதானென்று ஒரு மோகனாஸ்திரத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்து மறைந்தனன். அப்பாற் பானுகோபன் அதிக உற்சாகத்துடன் இருபதினாயிரம் வெள்ளம் இராட்சதவீரர்களும் தன்னைச் சூழ்ந்துவர யுத்த சன்னத்தனாய்ப் பிரயாணித்து யுத்த பூமிக்கு வந்து ஒரு தூதனை வீரவாகு தேவரிடம் அனுப்பிச் சீக்கிரம் யுத்தத்திற்கு வரவேண்டும். முன்போலச் சுலபமாய் நினைக்கவேண்டாம். உன்னைக் கொல்லக்கங்கணம் கட்டி வந்திருக்கிறேன் என்று தெரிவித்து வரச்சொன்னான். அதைக்கேட்ட. வீரவாகுதேவர் நகைத்து நம்மிடம் முன் தப்பித்துக் கொண்டோடிய அவனை இதோ கொல்லவருகின்றேனெனக் கூறித் தூதனை அனுப்பிவிட்டுத் துணைவருடன் குமாரக்கடவுளைத் தரிசித்து நிற்க, வீரவாகுதேவர் கருத்தைச் சண்முகக்கடவுள் தெரிந்தவராய், நீ பூதசேனைகளைக் கூட்டிக்கொண்டு பானுகோபனை வென்று மீளக்கடவாய். அப்பாதகன் மாயவஞ்சகங்களைச் செய்வானாகில் நமது வேற்றிவேல் வந்து உங்களைப் பாதுகாத்துத் திரும்புமென்று திருவுளம்பற்ற, வீரன் யுத்த சன்னத்தனாய்த் துரிதமாக நடந்து பானுகோபன் சேனைகளுடன் வந்திருக்கும் இரணக்களத்தை நெருங்கியவுடன் பவுத்திரவான்களாகிய சிவகணங்களும் வஞ்சமே குடிகொண்டிருக்கும் இராட்சதப்பாதகரும் வீராவேசங்களுடன் கொக்கரித்து நெருங்கிச் சபதங்களைப் பேசிச் சண்டை கொடுக்கத் தலைப்பட்டார்கள். அத்தருணத்தில் வானத்தில் வேடிக்கைபார்க்க வந்துற்ற தேவர்கள் இன்றையச்செயம் நமக்காகக் கடவதென ஆசீர்வதித்து மலர்களைச் சொரிந்தார்கள். அப்போது இருதிறத்துச் சேனை

களும் கை கலந்து சரீரமெங்கும் பத்தல்பத்தலாய்க் கிழிந்தும் சக்கை சக்கையாய் வெட்டுண்டும் சதை சிதைந்தும் நிலத்திற் புதைந்தும் அலைந்தும் உலைந்தும் களைத்தும் இளைத்தும் துடித்தும் பதைத்தும் சோர்ந்தும் மூர்ச்சித்தும் துகள்பட்டு மாண்டு மங்கியும் படாத பாடுகள் பட்டுக் கணக்கிறந்த இராட்சதப்பாதகரும் பூதப்படைகளிற் சிலரும் அழிந்தார்கள். அக்காலையில் இராட்சத சேனைத்தலைவர்கள் கோபித்துப் பூதசேனைத்தலைவர்களுடன் எதிர்த்துக் கொடும் போர் விளைத்து வாட்டிவரும் சமயத்தில், எண்மர் இட்சர்களிற் சிலர் முன் வந்து பானுகோபன் சேனைத்தலைவர்கள் செலுத்தும் பாணங்கள் அனைத்தையும் போக்கி அமோகமாகிய கூரிய கடுங்கணைகளைக் கரவேகமாப் பிரயோகித்து இராட்சத சேனைகளைக் கலக்கி மாய்த்து அவர்கள் சேனைத்தலைவர்களையும் சின்னபின்னப் படுத்தி வாட்டியபோது மாண்டவர்கள் போக மற்ற இராட்சதவெள்ளமானது தங்கி நிற்க மாட்டாமல் அதிவேகமாய்ப் புறங்காட்டி ஓடிஒளித்தனர். அதைப்பானுகோபன் கண்டு வடவைபோற் கோபித்து யுத்தபூமியை நோக்கித்தனது தேரைநடத்திக் கொண்டு வந்து பாரித்தவில்லை வளைத்துக்குணத்தொனி செய்து கர்ச்சிப்பதை வீரவாகுதேவர் கண்டு இவன்கருவத்தை அடக்கி அழிக்கவேண்டுமென்று தன் தேரையும் துரத்தி நாணேற்றிய வில்லுடன் முன்வந்து தோன்றினர். பானுகோபன் அதைக்கண்டு வடவை போற்சீறிக் கோடி கோடி அஸ்திரங்களைத் தொடுத்துச் செலுத்த அவைகள் மேலிட்டு வருவதனை வீரவாகுதேவர் கண்டவுடன் தாமும் அமோகமாகிய கணைகளைச் சந்தித்துச் சொரிய, இருவருக்கும் பிரமாதமான யுத்தம் நேரிட்டது. தேவர்கள் எல்லாரும் இந்த அரியயுத்தமானது எவ்வாறுமுடிவாகுமோவென்று பயப்பிராந்தியுடன் ஒதுங்கி இருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பானுகோபன் தனது பாணங்களினால் தேவர் தேகத்தினை மறைத்தனன். பாணங்களும் சுறுக்குச்சுறுக்கெனத்தைத்திட்ட அளவில் தேவர் கோபமுற்றுக் கைவேகமாகத்தமதுப் பாணங்களைச்செலுத்திப் பானுகோபன் இரதம் குதிரை சாரதியை அதப்படுத்த, அவன் உடனே வேறுதேர் ஏறுமுன் தேவரானவர் கரவேகமாக மேலும் சில குரூர பாணங்களை ஏவி அவன் மார்பைச் சல்லடைக்கண்களாகத்துளைத்தனர். பானுகோபன் இனி இவனைத் தேவப்படை

களால் ஜெயிக்கவேண்டுமென்று வருணாஸ்திரத்தை எடுத்து விட்டனன். சிவகுமாரன் தனது துணைவர்களைப் பயப்படாதீர்களெனக் கைஅமைத்து அக்கினியாஸ்திரத்தை விட்டனர். அக்கனற்படையானது பகைவன் விட்டகணையைக் கவளீகரம் செய்துகொண்டு மேலிட்டுவர, இராஜகுமாரன் வாயுவாஸ்திரத்தை விட்டனன், அது அக்கினிக்கணையின் வலியை அடக்கிப்பூதப்படைகள் பேரில் வந்தது. வீரவாகுதேவர் நாகாஸ்திரத்தை விட்டனர். அது வாயுவாஸ்திரத்தின் வலியை ஒடுக்கி மேலிட்டுவருவதைப் பானுகோபன் கண்டு கருடாஸ்திரத்தை விட்டனன். அது நாகாஸ்திரத்தை அதப்படுத்திப் போய் விட்டது. இவ்விதமாய் நாகாஸ்திரமானது ஒடுங்கக்கருடாஸ்திரம் மேலிட்டு வருவதனைத் தேவர்கண்டு கோபித்து ரிஷபாஸ்திரத்தைப் பூசித்துச் செலுத்தியவுடன் அது மீறி எழுந்துசெய்த பராக்கிரமங்களை ஆதிசேஷனும் சொல்ல முடியாது. இவ்விதப்பெருமைகளுடன் அது கருடாஸ்திரத்தைக் கவளீகரம்செய்து சீறிவரும்போது பானுகோபன் சீக்கிரம் காலாஸ்திரத்தைப் பிரயோகித்தான். ரிஷபாஸ்திரம் முன்னிலும் அதிக உற்பாதங்களைக் காட்டிவந்து அந்தப் படையையும் நாசம்செய்து விட்டது. பானுகோபன் கறகறெனப் பற்களைக்கடித்துப் பிரம்மாஸ்திரத்தை விடுத்தனன். அது நந்திப்படையைக் கண்டவுடன் நடு நடுங்கிப் பிழைத்தேன் பிழைத்தேனென்று திரும்பி விட்டவனிடம் வந்து சேர்ந்தது. அதைக்கண்ட தேவர்கள் கொண்டாடினர்கள். சூரன்பிள்ளை காலாந்தகனைப்போலச் சீறித் தக்ஷணம் நாராயணாஸ்திரத்தை விட்டனன். அதுநந்திப்படையுடன் எதிர்த்து அகோரயுத்தம் செய்யக் கண்டதேவர் வீரபத்திராஸ்திரத்தைச் செலுத்தினர். அது நந்திப்படையுடன் போராடுகின்ற நாராயணாஸ்திரத்தை வலியடக்கிச் சென்றது. இவ்விதம் தேவப்படைகளெல்லாம் வீணாவதைப் பானுகோபன்கண்டு திடுக்கிட்டுப் பாசுபதாஸ்திரத்தைப் போற்றி எடுத்து விட்டனன். தேவர் அதனைத் தெரிந்து தமது பாசுபதத்தையும் எடுத்து உபசரித்து விடுத்தனர். அவ்விருபடைகளும் ஒன்றுக்கொன்று பின்னிடையாமற் சிலநேரம் விநோதப் போரைக் காட்டிய சமயத்தில் இராட்சதப் பாதகர் சின்னப்பட்டும் தேரணிகள் பொடிப்பொடியாகக் குவிந்தும் யானைகள் வீறிட்டு மாய்ந்தும் புரவிகள் ஓடிமாண்டும் இவ்விதம் சதுரங்கசேனைகளையும் பறிகொடுத்

துப் பானுகோபன் ஏகாங்கியாக நின்றனன். பின் இரண்டு பாசுபதங்களும் திரும்பித் தங்களைச் செலுத்திய வீரர்களிடத்திற் சேர்ந்தன. இத்தனைக்கண்ட பானுகோபன் இனிமாயப்பெருக்கினால் அல்லது இத்தூதனை ஜெயிக்க ஒண்ணாதென நிதானித்துத் துரிதமாய் மோகனமந்திரத்தைச் செபித்துத்தன் தேகத்தை மறைத்துப் புகை உருக்கொண்டு வானத்தில் எழும்பினன். அதைக்கண்ட பூதப்படைகள் முதல்தினத்தைப் போலவே பாதகன் இப்போதும் பயந்தோடினன். என்பதாகத் தங்கள் கரங்களைக் கொட்டிச் சிருங்கநாதஞ் செய்திருந்தனர்.

அத்தருணத்தில் வீரவாகுதேவர் தன் துணைவர் முதலான மற்றப் பூதப்படைகளுடன் கந்தசுவாமி வீற்றிருக்கும் பாசறையை நோக்கிச் சூரியனும் அஸ்தமானமாகி விட்டமையால் இனி நாளைக் காலையுத்தத்திற்கு வருவோமெனவும் பகைவன் மாயையின் மூலமாய்த்தப்பி யோடினன் எனவும் தீர்மானித்துக் கொண்டு செல்வதாயினர். இவைகளை வானத்தில் மறைந்திருக்கும் பானுகோபன் கண்டு இது சமயத்திற் பகைவரை வென்று ஜெயப்பிரதாபத்தை அடைவேனென்று துணிந்து மாயைதனக்கு அநுக்கிரகம் செய்திருந்த மோகனப்படையை எடுத்து விட்டனன். அது ஆகாயத்தை விட்டுப்பூமிக்கு இறங்கி எவருக்கும் தோற்றாமல் வீரவாகுதேவர் முதலானவர்கள் இருக்கும் இடங்களிற் புகையைப் போலப்பரவி அவர்கள் அனைவோர்களின் உயிரையும் உண்டு பலவிதமாகச் சேனைகள் முதல் யாவரையும் ஒன்றாய்ச்சேர்த்து இறுக்கிக்கட்டி ஆறு சமுத்திரங்களையும் நிமைப்போதிற் கடந்து சுத்தோதக சமுத்திரத்தைச்சேர்ந்து அந்நீர்ப்பெருக்கின் பாதலத்தில் அவர்கள் அனைவோரையும் கொண்டு போய் அமிழ்த்தி அப்படை நாலு மூலைகளிலும் பத்திரமாய்க் காவல் கொண்டிருந்தது. பானுகோபன் அடங்காத ஸந்தோஷத்தனாய்த் தன் பிதாவாகிய சூரபதுமனை வந்தடைந்து அய்யனே! இத்தினம் அடியேன் நமது சத்துருக்கள் அனைவரையும் கொன்று பல பாசங்களினால் கட்டிச் சுத்தோதகத்தில் அமிழ்த்தி விட்டேன். இனி நாளைத்தினம் பால சுப்பிரமணியனையும் அவனைச்சேர்ந்து வந்திருக்கும் தேவர்களனைவோர்களையும் பிடித்து வந்து உமது சந்நிதானத்தில் விடக்கடவேனென்று சொன்னவுடன் சூரபதுமன் அடங்காத ஸந்தோஷத்தனாகித் தன்

புத்திரனைக் கொண்டாடி. அவனுக்கு ஆடை ஆபரணாதிகள் எல்லாம் சன்மானித்து நாளையத்தினம் மற்றப் பகைவரையும் வாட்டி. வெற்றி கொள்ளக் கடவாயென அவனுக்குச் செலவு கொடுத்தனுப்பினன். பானுகோபன் உற்சாகத்துடன் தனது அரமனை சேர்ந்து விடியும் பொழுதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இவைநிற்கப் பானுகோபன் வஞ்சனைச் செய்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள் துக்கசாகரத்தில் மூழ்கி வாய்விட்டுப் புலம்பி இந்திரனுடன் பாலசுப்பிரமணிய தேவனை வந்து வணங்கி ஐயனே! இத்தினச் சண்டையிற் பானுகோபன் வீரவாகுதேவருக்குத் தோற்றவனாகி மேகத்தில் மறைந்து ஒரு மோகனப்படையைப் பிரயோகித்து வீரவாகுதேவர் முதற் பூதப்படைகள் ஈறாகக்கொன்று கட்டிப்போய்ச் சுத்தோதக சமுத்திரத்திற் சேர்த்து விட்டனன். இதற்கென்ன செய்வோமென்று மிகவும் பரிபவப்பட்டுத் துதிக்கின்றபோது குமாரதேவர் பயப்படாதீர்களெனத் தமது திருக்கரத்தில் விளங்கும் வெற்றிவேலாயுதத்தைப் பார்த்து நீ வேகமாகப் போய் அந்த மோகனப்படையை அதஞ்செய்து கடலிற் படிந்திருக்கின்ற நமது வீரவாகு முதலியோரின் மயக்கத்தை ஒழித்து இவ்விடம் கொண்டுவருவை எனக்கட்டளை யிட்டவுடன் அது மகாபாக்கியமென்றெழுந்து முற்காலத்தில் திரிபுராதியரை அழிக்கச் செலுத்திய நகைக்கனலைப்போல விரைந்தோடிச் சுத்தோதகக்கடலின் அருகில் வருவதை மோகனப்படைகண்டு திடுக்கிட்டு ஓடி விலகியது. அத்தருணத்திற் கடற்கரசன் வேலாயுதத்திற் கெதிர்நோக்கி வந்து படைகளுக்கரசே! பானுகோபன் மோகனாஸ்திரத்தைப் பிரயோகித்து வீரவாகுதேவர் எண்மர் இலட்சர் படைத்தலைவர் பூதசேனைகளை மயக்கிப் பிரேதங்களாக்கிக் காட்டிக் கொண்டுவந்து என்னிடத்திற் சேர்க்கச்செய்தான். அக்கொடியபாணமும் இஃவிடத்திற் காவலிருந்தது. இப்போது தேவரீர் வரவால் அது வெதும்பி மாண்டது. அப்பாணத்தை அடியேனுக்கு வாட்டவலி யில்லாததினாலும் அவுணப்பாதகர்க்குட்பட்டும் வாடி யிருக்க நேரிட்டது. ஆதலால் அடியேனை க்ஷமித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க வேற்படையானது கடலிறைவனை! ஆதரித்துப் பின் கடலினிடத்தில் உலாவிவந்தபோது பிரே

தங்களைப்போல் அழுந்திக்கிடந்த வீரவாகுதேவர் முதலானசிவகணங்களுக்கு அறிவுதோன்றித்தங்கள் கண்களை விழித்து ஜெய வுற்சாகங்களுடன் ஜெய ஜெயபோற்றி யென ஆரவாரித்துக்கொண்டுவெளிவந்தனர். அக்காலத்தில் தேவர்கள் பரவசத்தராய்த் தருக்களினது புஷ்பங்களை வாழி! வாழி! யெனக்கூறிச்சொரிந்தனர். வெற்றிவேல் வானத்தில் உலவியிருப்பதை வீரவாகுதேவர் முதலானவர்கள் தெரிசித்தவுடன் அவர்கள் அப்படையரசைப் பலதரம் பணிந்து எதிர்கொண்டு சூழ்ந்து சகலமுந்தெரிந்த நமது இறைவனாகிய முருகக்கடவுள் இரக்கமுற்றுச்செலுத்திய அந்த வேலாயுதப் பெருமையினால் தாம் உயிர் பெற்றெழுந்தனமென்று ஆழ்ந்த கருத்தினால் யூகித்தறிந்து கொண்டு வீரவாகுதேவர் இதனைச் சொல்வதாயினர். ஓ கிரியாமூர்த்தி! தேவரீரைப்பாலசுப்பிரமணியக் கடவுளுக்குளைப்பாக இக்காலத்தில்யாங்கள் தெரிசித்துச் சகல துன்பங்களையும் போக்கினோம். முன் கிரவுஞ்சகிரியினிடத்தும் இவ்வாறே தேவரீர்எங்களை இரட்சித்தீர்! இவைகளுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகின்றோமெனப் பலவாறு போற்றிய காலையில் வேலாயுதமானது எல்லாம் முருகப்பெருமாள் கடாக்ஷமாகும். நீங்கள் அனைவரும் சண்முகப் பெருமானைச் சீக்கிரம் வந்தடையுங்களெனக் கட்டளையிட்டு அப்படையானது முன்னம் வந்து சரவணபவனுக்குச் சகல சமாசாரங்களையுந் தெரிவித்து முன்போல் அக்கடவுளது திருக்கரத்தில் அமர்ந்து விளங்கியது.

வெற்றிவேலானது சென்றபின் வீரவாகுதேவர் முதலியயாவரும் வானவழிக்கொண்டு சென்று இரணக்களத்திற்கு நேராக வந்திறங்கிச் சூரன் வாசமாயிருக்கும் மயேந்திரபுரியைக் கண்ட மாத்திரத்தில் வீரவாகுதேவருக்கு அதிக கோபம் பிரவேசித்துச் சொல்லுவார். கொடியபோரைச்செய்ய வலியற்றவனாய் வானத்தில் மறைந்து வஞ்சகத்தினால் நம் அனைவரையும் வென்றுபோன பானுகோபனை இப்போதே மடக்கிக்கொன்று என்கோபம் தணிந்தால் அல்லது எமது கர்த்தனிடம் செல்ல விருப்பமில்லை. அது தவறினால் என் உயிரை வைத்திருக்கமாட்டேன். என் தாய் வயற்றிற் பிறந்தவனும் அல்லேன் எனச்சபதம் பேசிய காலத்தில் மற்றவரும் தேவரீர் குறித்த காரியம் தகும் தகும் என்று மனம் ஒருமித்து மயேந்திரபுரியைச் சேர்ந்து

மேற்குக் கோபுரவாயிலைச் சூழ்ந்து இராட்சதர் திடுக்கிட்டுக் கலங்கக் கொக்கரித்தார்கள். அப்போது அந்தவாயிலினிடத்திற் காவல்கொண்டிருந்த வியாக்கிரமுகன் என்பவன் விழிகளில் தீயெழத் தன்சேனைகளைக் கூவிப்பகைவரை வாட்டும்படிக்குக் கட்டளையிட்டுத் தானும் பின் அணியத்தில் வருவதாயினான். இருதிறத்துச் சேனைகளும் வடவையும் ஆலமும் எதிர்த்துப் போராடுவதற் கொப்பாகக் கொடிய போரைச் செய்தபோது மடிந்த இராட்சதர்கள் போக மற்றவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அதுகண்ட வியாக்கிரமுகன் சூலாயுதமொன்றைத் தன் கரத்திற் பற்றியவனாய்ப் பூதப்படைகளைக் கலங்க அடித்தான். அப்போது சிங்கனென்னும் பூதப்படைத்தலைவன் கூரிய சூலமொன்றைத் தன் கரத்திற்கொண்டு அவுணப்பாதகனுடன் இளையாமற் போராடி அப்பால் இருவீரரும் மல்யுத்தத்திற்கு ஆரம்பித்ததிற் சிங்கன் என்பவன் அவுணவீரனைக்கொன்று வீழ்த்தினன். அதைக் கண்ட பூதவெள்ளமானது ஆர்ப்பரித்து வந்து கோபுரவாயிலை இடித்துத் தள்ளிப் பட்டணத்திற்குள் மேலிட்டுச்சென்று பல பல விதங்களில் அங்கு நாசப்படுத்தத் தொடங்கியது. வீரவாகுதேவர் தமது அக்கினி அஸ்திரத்தையும் வாயுவஸ்திரத்தையும் பிரயோகித்து விட்டனர். அந்தப் பாணங்கள் பட்டணமெங்கும் அக்கினிப் பிரவேசமாக்கிக்கரிந்து போகச்செய்த சமயத்தில் அசுரதூதர்கள்வேகமாகச் சூரபதுமனிடம் போய்ப் மானுகோபன் ஜெயித்து விட்டதாகச் சொன்னவர்கள் அனைவரும் இப்போது அந்தப் பாலசுப்பிரமணியன் கடாக்ஷத்தினால் திரும்ப உயிர் பெற்றெழுந்து வந்தனர். பட்டணத்தின் பொன்மயமாகிய மாடமாளிகை கூடகோபுர முதலான வைகளனைத்தையும் அவர்கள் கொளுத்தி வாட்டுகின்றனர். இன்னம் என்ன திக்குகள் விளையுமோ அறிகிலோமென முறையிட்டுக் கொண்டார்கள். அதைக்கேட்ட சூரன் சீறி அண்டப் பித்திகையில் உறங்கிக் கிடக்கும் ஊழிமேகங்களைத் தருவித்து அவைகளை நோக்கி நீங்கள் இந்தப் பட்டணத்தைக் கொளுத்திவாட்டும் அக்கினிப் பெருக்கை ஒரு நொடியில் அவித்து வரக்கடவீர்களெனக் கட்டளை யிட்டான். உடனே அவைகள் சமுத்திர நீரை உண்டு வானத்திற் சென்று வீரவாகுதேவர் நம்மைக் கொல்வதிற் சந்தேகமில்லை சூரப்பாதகனால் நாம் மடிவதிலும் வீரவாகுதேவரால் இறந்தால் இம்மை மறுமைக்கு

வேண்டும் நலங்களை அடையலாமென்று துணிவுகொண்டவைகளாய் யானைப்பிரமாணமாகிய துளிகளை அபரிமிதமாக வருஷித்து அக்கினியின் வெப்பத்தைத் தணியச்செய்து விட்டன. வீரவாகுதேவர் இதென்ன அசுரர் மாயையோ வென்று யோசித்திருக்கும்போது நாரதர், வீரனே இவை சூரன் ஆக்கினையின்பேரில் வருஷிக்கும் ஊழி மேகங்களாகும். ஊழிக்கனற்படையைச் செலுத்துவாயெனக் கட்டளையிட்டுச் சென்ற பிரகாரம் வீரனும் அதை எடுத்து விடுத்தனன். அப்படையானது வெளிப்பட்டு அம்மேகங்களை வளைந்துகொண்டு அவைகளின் நீர்ப்பசுமை முற்றும் வறளச்செய்து வலியையும் ஒடுக்கித் திரும்பி வந்தது. அதனைத் தூதுவரால் கேள்விப்பட்ட சூரன் மிகச்சிற்றமுடையவனுகத் தானே யுத்தம் புரிந்து சத்துருக்களைச் செயங்கொள்ளக் கருதித்தனது இந்திர ஞாலத்தேரைக் கொண்டு வரப் பணித்தனன்.

அதனைச் சூரன் பிள்ளையாகிய இரணியன் தெரிந்து இவ்வாறு பிதாவைப்பணிந்து உரைப்பதாயினன். ஐயனே! எனது வார்த்தைகளைச் சற்று கவனித்துக் கேட்டருள்வீராக! நமது தாயாதிகளாகிய தேவர்களை இம்சிப்பது தருமமல்ல. நமக்கு இந்தச் சம்பத்துக்களைக் கொடுத்த பரமசிவனே இவைகளைத் திரும்பப் போக்குவிக்கவும் வல்லவரல்லவா? அந்தப் பரமசிவத்தினுடைய அளக்கருஞ் செயல்கள் முற்றும் நீரே தெரிந்தவராயும் இருக்கின்றீர். நீர்இப்போது சண்டை தொடுக்க எத்தனித்திருக்கும் சண்முகப் பெருமானுக்கும் அந்தப் பரமசிவனுக்கும் ஒருபேதம் இருப்பதாக நினைக்கவேவேண்டாம். இந்தக் கந்தசுவாமியினுடைய வல்லபங்கள் அனைத்தும் உமக்கு அனுபவத்தில் தெரியவும் வரும். ஆகையினாலே அவரைப் பாலனென்று இகழாமல் அவர் திருவடிகளிற் சேவித்து இன்னும் இந்தச் சம்பத்துக்களை அனுபவித்துச் சுகமாயிருக்கலாமென்று சொன்னவளவிற் சூரனுக்குக் கோபம் பிறந்து இரணியனை உருத்துப்பார்த்து இதனைச் சொல்லுகின்றான். யாரோபயமுறுத்தி உனக்கு உபதேசித்த வார்த்தைகளை இங்கே எனக்கு எடுத்துச்சொல்லவந்தனை. விஷ்ணு பிரமன் இந்திரன் முதலியவர்களும் என் ஏவல்களுக்கு அடங்கிக் கீழ்ப்படிந்திருப்பதனை நீ அறியாயோ? காளகண்ட மூர்த்தியானவர் நேற்றுப்பெ

ற்ற சிறுவனோ என்னை வெல்லப் போகிறான் என்று பற்பல தனது பராக்கிரமங்களைக்கூறி ஆங்காரங்கொண்டதை இரணியன் கண்டு இனிநாமும் சண்முகப்பெருமாள்கையினால் இறந்து நல்லபதவி அடைவதே மேன்மையென்று தன் மனதில் தீர்மானித்தவனாய்ப் பிதாவே! நான் சிறுபிள்ளைத்தனமாகச்சொன்னவைகளுக்கு இவ்வாறு கோபங்கொள்ளலாமா? இதோ நானே போய் அவர்கள் அனைவோரையும் வாட்டிவெற்றிபெற்றுத் திரும்புகிறேனென்று அவனிடம் விடைபெற்றுப்பின் தானும் போர்க்கோலங்கொண்டு புயவலி கொண்ட தன் தோழர்களுடனும் சதுரங்க சேனைகளுடனும் புறப்பட்டுச்செல்வதாயினான். அதனை வீரவாகுதேவர் கண்டுவருவது யாரோவென்று ஆலோசித்திருக்கும்போது நாரதர் அத்தேவருக்கு இரணியன்வரவு முதலிய சகலத்தையும் எடுத்துரைத்துப் போயினார்.

உடனே வீரவாகுதேவரும் யுத்தசன்னத்தராய் இரணியனுக்கு எதிர்போவ தாயினார். அவுணவீரர் பூதவெள்ளங்கள் பேரிற் பாண வருஷங்களைப் பொழிய அவர்கள் வெகுண்டு மரங்களையும் மலைகளையும் பறித்து அவர்களைச் சாடிக்கொக்கரித்தனர். அப்போது எண்மர் இலட்சர் படைத்தலைவரும் இராட்சத வீரர்களும் எதிர்த்து அஸ்திர சஸ்திரங்களைக் கொண்டும் தாங்கள் தங்கள் பருவதங்கள் விருட்சங்களைக்கொண்டும் அமோகமாகக் கொடிய போரைச் செய்தனர். வீரவாகுதேவர் சீறித்தமது மகிமையான பல பாணங்களைத் தூண்டிப் பெரும்புறக்கடலுக்கு ஒப்பாக இரைந்து பரந்திருந்த இராட்சத சதுரங்க வெள்ளங்களின் பேரிற் பிரயோகித்த காலையில் அவைகள் யாவும் சின்னபின்னப் பட்டதினின்றும் எழுந்த உதிரவாரியானது பெருக்கெடுத்தோடிக் கடலிற் பாய்ந்தது. பிணமலைகள் எவ்விடங்களிலும் குவிந்து விளங்கின. அதனை இரணியன் கண்டு பூதரை ஓடிப் பதுங்கும் படிக்குப் பலவாறினும் சாடுவதாயினான். அதனை நீலன் கண்டு இரணியன் முன் எதிர்த்து வரச் சூரன்பிள்ளை அவன் மார்பை வேலாயுதத்தாற் பிளந்தனன், நீலன் அதைச்சட்டைபண்ணாமல் மராமரம் ஒன்றினால் இரணியன் இரதத்தைச் சாரதிகுதிரைகளுடன் சாடினான். சூரன்குமாரன் மற்றொரு தேரிற்பாய்ந்து அமோகமாகிய பாணகோடிகளினால்நீலன் சரீரத்தைச்சல்லடையாய் துளைத்தனன். அவன் வருந்தாமல் தீரனாய்க் கிரிகளைப்பறித்து இரணியன்பேரில் வீசிவ

ரும்போது அவன் அவைகளைப் பொடிசெய்யப் பூதத்தலைவன் கோபித்து இரணியனுடைய தேரைஎடுத்து வானத்தில் வீசிவிட்டனன். அதுவாயுமண்டலம்வரை போய்த்திரும்பிப் பூமியில் விழுமுன் இரணியன் நிலத்திற்பாய்ந்து மற்றொருதேரிலேறப் போகின்ற சமயத்தில் நீலன் அவன்மார்பில் அறைந்தனன். இரணியன் அஞ்சாமல் நீலனைவானத்தில்வாரிஎறிந்தனன். அவன்பூமியைத் திரும்பவந்தடைந்து தன்துகாலினல் இரணியன் மார்பில் உதைத்துத்தள்ளி அவன் சிரசிலும் மார்பிலும் மிதித்துத்தேகத்தை நறுக்கியபோது அசுர குமாரன் தப்பிக்க வழியின்றி விழித்துச் சௌரவமாய மந்திரத்தை உச்சரித்தவுடன் அதற்குரிய தேவதை இரணியனைப்போல உருக்கொண்டு பெரிய கோரரூபத்துடன் கொக்கரித்து வீரங்களைப் பேசிக்கொண்டு சண்டைக்குவருவதனை நீலன் கண்டு செத்தபிணத்தின் தண்டமொன்றைத் தன் கரத்திலெடுத்துக் கொண்டு வீறிவந்த மாய வடிவத்தின் சிரத்தின்மேல் மோதினன். மாயவுருவானது வானத்தில் தோன்றி உன்பிராணனை வாங்குகிறேனென்று வீரங்கள் பேசுவதை நீலன் கண்டு கோபித்துக் கதையைச் சுழற்றி அதின் பேரிற்பாய அவ்விடத்தில் அதைக்காணமல் இது என்னபுதுமை என்றிருக்கும் போது அந்த மாயவுருவானது நீலனைப் பலவிதங்களிலும் வீணை அலைச்சலுக்கு ஏதுசெய்தும் அவன் பயப்படாமலிருந்த சமயத்தில் முன் வீழ்ந்துகிடந்த இரணியன் களைதீர்ந்தெழுந்து அவன் பேரிற் பாணங்களைப் பிரயோகித்துப் புண்படுத்துவ்தாயினன். அதனை வீரவாகுதேவர் கண்டு ஞானப்படையை யெடுத்துச் செலுத்தினர். உடனே அம்மாயவித்தைகள் அனைத்தும் பறந்தோடி விட்டன. இரணியன் வருத்தமுற்றுப் பின்னும் பாணங்களைப் பிரயோகித்துக் கொக்கரித்தனன். அவைகள் வீரவாகுதேவர் மார்பில்தாக்கி முனைமழுங்கி வீழ்ந்தன. இவ்வாறு வீரவாகுதேவருடன் இரணியன் பலவாறுகப் போராடிப்பார்த்தும் ஒன்றும் பலிக்காததைக்கண்டு ஓஹோ! இனி இந்த எமனை ஒத்ததூதன் நம்மைக்கொல்வதிற் சந்தேகமில்லை. நமது பிதா முதலானவர்களும் இனிமாள்வது நிச்சயம். அவர்கள் இறந்த காலத்தில் அவர்களுக்கு ஈமவிதிகளை முடிப்பதற்கு ஒரு புத்திரனும் இல்லாவிடிற் சந்திரர் சூரியர் உள்ளவரையில் தீராப்பழிப்புரை நிலைபெற்றிருக்கும் இதைக்குறித்து என் பிராணனைத்தாங்கி மறைந்திருப்பது கடனாகும் எனத் தீர்மானித்தவனய் அவன் துரிதமாக வானத்

தெழும்பி மேகத்தில்மறைந்து மாயமந்திரமொன்றைச் செபித்து அதின் முயர்ச்சியினுல் மீன் வடிவைப்பெற்றுக் கருநீரிற்பாய்ந்து ஒளிந்திருந்தனன். இதனைக்கண்ட வீரவாகுதேவர் வெற்றிச்சங்கத்தினை முழக்கினர். அவ்வோசையைக்கேட்ட பூதப்படைகள் ஸந்தோஷத்தில் மூழ்கி ஆர்ப்பரித்தார்கள். சிலதூதர்கள் இந்தச்சமாசாரத்தைச் சூரனிடம் ஓடித்தெரிவிக்க அவன் மானமும் கோபமும்தன்மனதை வருத்த ஒன்றும் தோன்றுமலிருந்ததருணத்தில் அக்கினிமுகன் என்னும் அவன் குமாரன் அவனிடம் வருவதாயினன்.

"அக்கினிமுகன் வதம்"

அந்த அக்கினிமுகன் பராக்கிரமங்கள் சிலவற்றை இங்கு சொல்லுவோம். இவன் சிறுபிள்ளையா யிருக்கும்போது திக்குப்பாலகரையும் எண்கிரிகளையும் திசையானைகளையும் பற்றிவந்து பந்தாக விளையாடியும் சூரியனுடைய தேரைப் பிடித்திழுத்து வீதிகளிற் சிறுதேர் விளையாடியும் விஷ்ணுவாகனமாகிய கருடனையும் பிரமதேவன் வாகனமாகிய அன்னப்பட்சியையும் பிடித்து வந்து அவைகளை ஒன்றுடனென்று சண்டைவிட்டு வேடிக்கை பார்த்தும் சந்திரனைப் பிடித்துக் காவலில்வைத்தும் இத்தகைய அரிய சூரத்தனங்களையும் மகாபாதகங்களையும் செய்பவனும் முகத்தில் எப்போதும் சுவாலை வீசிக்கொண்டிருக்கும் காரணத்தால் அக்கினி முகனென்னும் பேரையுடையவனுகவும் இருந்தான். இந்தப்பாதகன் துக்கத்தின் மூழ்கியிருந்த தன் பிதாவைக்கண்டு ஐயனே! இவ்வித த்துக்கத்துக்குக் காரண மென்னவென்று வினவச் சூரன், புத்திரசிகாமணியே! என்று ஆதிமுதற் சகல சம்பவங்களையும் எடுத்துரைத்தபோது அக்கினிமுகன் மகாக் கோபங்கொண்டு தனது பிதாவைத்தேற்றி இதோ இந்த நிமிஷம் அந்தச் சத்துருக்கள் அனைவோரையும் ஜெயங்கொண்டு திரும்பி வருகிறேனென்று யுத்த சன்னத்தனுய்ப் பிரயாணப் படுவதாயினுன். இவ்விதம் நால்வகைச் சேனைகள் தன்னைச்சூழச் சூரன் குமாரனுகிய எரிமுகன் என்னும் வீரன் வேகமாகப் பூதப்பெருக்கின் அணித்தாக வரும்போது சிவகணங்கள் கோபித்துப் பாரித்தோங்கிய பருவதங்கள் விருட்சங்கள் இருப்புலக்கைகள் வளைதடிகள் தண்டாயுதங்கள் முதலாய படைகளைக் கரங்களில் தாங்கிக் கொதித்தேறி விளங்கி இராட்

சதசேனைகளுடன் கைகலந்து வீராவேசங்களுடன் ஒருவரை ஒருவர் அதட்டிச் சண்டை செய்வதானார்கள்.

அத்தருணத்தில் நந்தியம் பெருமான் அம்சையில் அவதரித்திருக்கின்ற எண்மரும் இலட்சரும் கோபித்து விஷமிட்டகணைகள் முதலானவற்றைச் சோணைமாரிபோற் சொரிந்தார்கள். அவுணப்படைகள் சகிக்கமாட்டாமற் பலதிசைகளினும் ஓடி ஒளித்தார்கள். அதனை எரிமுகன் கண்டு தன் சேனைத்தலைவர்களை ஏவிவிட அவர்களில் ஒருவனாகிய மேகன் என்பவன் முன்னே எதிர்த்து வந்து வீரமாபுரந்தரனிடம் போராடிக் கடைசியில் அவனுடைய வேலாயுதத்தினால் மாண்டுபோனான். அதைக்கண்ட இராட்சதர் அஞ்சி ஓட்டம் பிடித்தார்கள். எரிமுகன் கோபங்கொண்டு தனது அளவிறந்த அஸ்திரங்களாற் பூதப்படைகளையும் சேனைத்தலைவர்களையும் இரதங்கள் குதிரைகள் முதலிய யாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து மிகவும் சின்ன பின்னஞ் செய்து உதிரப்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடச்செய்தான். சூரன் குமாரனுடைய ஜெயத்தைக் கண்டபகவான் என்னும் பூதவீரன் காலாந்தகனைப்போல வெளிவந்ததனை எரிமுகன் கண்டு அவனுடன போராடித்தன் விற்சாதுரியத்தினால் அவன் மார்பையும் பிளந்து கீழேவீழ்த்தினான். அப்போது அவன் துணைவர்கள் அனைவரும் சீறிப்பல சங்கையற்ற கொடிய பாணங்களை அந்த இராஜ குமாரன் பேரிற்பிரயோகிக்க அப்பாதகன் அவைகளை ஒன்றும் லெட்சியம் செய்யாமற் பாசுபதாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகித்தனன். எழுவரும் இது அக்கினி யஸ்திரம்போற் காணப்படுகிறதென்று வருணாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தார்கள். அதனைப்பாசுபதம் கவளீகரஞ்செய்து சீறிவந்து எழுவர் சிரங்களையும் கண்டித்துப் போய்விட்டது. பூதப்படைகள் அதனைக் கண்டவுடன் பலதிக்குகளிலும் பயந்தோடி ஒளித்தன.

அக்காலத்தில் வீரவாகுதேவர் துடிதுடித்துக் கோபங்கொண்டு தன்தேரை முன்னே சண்டைக்கு நடத்தி வந்ததனை அக்கினிமுகன் கோபத்துடன் பார்த்து அவரைப் பலவாறாக இகழ்ந்து இதோ உன்னை இப்போது கொன்று விடுகிறேனென்று பேசியதை வீரவாகுதேவர் கேட்டுத் தம்புஜத்தைத் தட்டி நகைத்து உன்வாசகம் வெகு நேர்த்தியாக இருக்கின்றது. பானுகோபனும் இவ்வாறு தான் பேசி

வந்து மோச மாயவித்தைகளைச் செய்தும் கடைசியில் ஆற்றாமற் பதுங்கி ஓடினான், இரணியனும் பேடியைப்போலப் பயந்து கடலில் மறைந்தான். வஞ்சத்தாற் பிழைத்துக்கொண்டிருக்கிற இவர்களுக்கு முன் நீ என்னுல் மாளவந்து தோற்றினை. உன் பராக்கிரமத்தைக் காட்டலாமென்ற வளவில் எரிமுகனுக்குக் கோபம் பிறந்து வீரவாகு தேவருடன் கொடிய பாணங்களைச் செலுத்திப்போராடி அவருடைய நெற்றியிலும் காயம் படச்சாடி வெற்றிச்சங்கம் பூரித்தான். வீரவாகு தேவர் அதற்கு இளையாமற் சண்டை. தொடுத்த காலையில் அக்கினிமுகன் வாயுவஸ்திரம் இயமாஸ்திரம் சூரியாஸ்திரம் இவைகளை ஏவ, அவைகளையெல்லாம் வீரவாகுதேவர் போக்கி மேலும் பாணங்களைச்செலுத்தி அவன் வயிரமார்பைத் தடாரித்து உருவிப்போகச் செய்தனர். எரிமுகன் கதறிக்கொண்டு கீழேவிழுந்தான். சில நேரம் சென்று அந்தப்பாதகன் களைப்பு நீங்கி எழுந்து இந்த வீரனைச்செயிக்க முடியாதென்று எண்ணித்தனக்குப் பாலப்பருவத்தில் வரம் கொடுத்திருந்த பத்திரகாளியை நினைத்து அந்தச் சமயத்தில் உதவி செய்ய வேண்டுமென்று அவளை தியானிக்கலாயினன். அந்தத் தேவதையானவள் ஓங்காரித்த அதிர்ச்சியுடன் சிங்கவாகனத்தில் தோன்றி வீரவாகுதேவர்பேரில் மழுப்படையைப் பிரயோகித்தனள். அதைத் தேவர் துண்டமாகவெட்டி எறிந்தனர். காளி கோபங்கொண்டு மற்றொரு சூலத்தைச் சுழற்றி எறிந்தனள். அதையும் தேவர் துகள்படச்செய்தனர். பத்திரகாளி அதைப்பார்த்துச் சீறித்தன் சிங்கவாகனத்தை விட்டுக்குதித்துக் கொக்கரித்து மின்னலைப்போல இடம்வலமாகச் சுழன்று வீரவாகுதேவர் தேரிற்பாய்ந்து வரும்போது தேவர் இடியைப்போலக் கர்ச்சித்து அவள் எட்டுக்கரங்களையும் இறுக்கிப் பிடித்து மற்றத் தன்கரத்தினுற் பிரளய விடியைப்போல அவள் மார்பினிடத்தில் அறைந்த தருணத்தில் அவள் மரண மூர்ச்சையடைந்து தேரில் விழுந்தாள். அப்பாற் சற்றுநேரத்திற் காளியானவள் களை தெளிந்து எழுந்து துக்கமும் மானமும் தன் மனதைவாட்ட வீரவாகுதேவர் கோபந்தணிய இதனைச் சொல்வதாயினள். ஓ வீராதி வீரனே! நான் முன் பானுகோபனுக்குக் கொடுத்தவரப்படிக்கு நான் உன்னோடு எதிர்த்துப் போராடும்படிக்கு வந்தேனே ஒழிய வேறில்லை. நீ இப்போது எனக்குச் செலவு கொடுப்பாயானுல் என் இருப்பிடம்

போய்ச்சேருவேன். நீ இனி அக்கினி முகனைக்கொன்று சுகஜீவியாய் வாழக்கடவை யென்று சொல்லித் தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தனள். அதைக்கண்ட அக்கினிமுகன் காளியை இகழ்ந்து பேசி வீரவாகுதேவர் ஏறியிருந்ததேரைத் தன் பாணங்களினாற் பொடியாக்கித்தள்ளினான். தேவர் கோபங்கொண்டு அசுரன் கைவில்லைப் பாணத்தால் வெட்டி யெறிந்தனர். அசுரன் வேறுவில்லெடுத்துப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அது பலமகிமைகளைக் காட்டி வரும்போது வீரவாகுதேவர் வீரபத்திராஸ்திரத்தைத் தூண்டி விட்டனர். அதைப் பிரமாஸ்திரங் கண்டு நடு நடுங்கி நாணித்திரும்பி விட்டது. உடனே வீரபத்திரப்படை சீறி வேகமாய்ப் பாய்ந்து அக்கினிமுகன் சிரங்கள் பத்தையும் கண்டித்து அவன் பிராணனைக் கொண்டு வானத்திற் கிளம்பி ஆகாயகங்கையில் மூழ்கித்திரும்பி வீரவாகு தேவரிடம் வந்து சேர்ந்தது. தேவர்கள் ஆனந்தக்கூத்தாடிக் கற்பகமலர்களை வாரி வாரி அவ்வையனை வாழ்த்திச் சொரிந்தார்கள். அவுணப்படைத் தலைவர்கள் இருபதினாயிரம் பேர்களும் அந்த வெற்றியைக் கண்டு புலம்பி அழுது பின் ரவுத்திரா காரமாகக் கோபித்து இந்த வீரனைவளைத்துக் கொன்று பழிவாங்க வேண்டுமென்று தேவரைச் சூழ்ந்து கூடிக் கொண்டு பல விதங்களாகப் போராடிய சமயத்தில் வீரவாகுதேவர் காலாந்தகனைப்போற் சீறித் தமது அமோகமாகிய பாணங்களினால் அவர்களனைவோர்களையும் சதுரங்க சேனைகளுடன் ஒரு நொடிப்போதில் மடித்து எங்கும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத் தோடும்படிக்குச் செய்து விட்டனர். அப்போது பிராணபீதியினாற் புறங்காட்டிப் பதுங்கிக் கொண்டிருந்த அவுணர்கள் தங்கள் வீரமாமயேந்திரபுரியை நோக்கி ஓட்டம் பிடிப்பதானார்கள். வீரவாகுதேவர் பிரளய காலருத்திரனைப்போலச் சமர்களத்திற் போரைமுடித்துநாரியை இறக்கி வில்லை ஊன்றிக்கொண்டு மனவெழுச்சியுடன் இருக்குந் தருணத்தில் இராட்சதப்பாதகரால் வருந்தியிருந்த இலட்சர் படைவீரர் பூதசயினியங்கள் அனைவரும் வந்து அவரைச் சேர்ந்ததோடு முன் அக்கினிமுகனால் மார்புபிளக்கப்பட்டு வீழ்ந்த வீரமாபுரந்தானும் தன் சோபம் நீங்கித்தன் தமயனாகிய வீரவாகுதேவரை வந்தடைந்தனன்.

இவ்விதமாக வீரவாகுதேவரைச் சூழ்ந்திருக்கின்ற காலையில் தமது மற்ற எழு சகோதரர்களையும் காணாமையால் தேவர் வருத்தத்தினாற் படைவீரர்களைப் பார்த்து இதனைச் சொல்லுவதாயினார். நம் இளையவர் எழுவரும் சூரன் குமாரனால் மாளப்பெற்றனரோ! அல்லது மரணமூர்ச்சை தெளியாமல் தூரத்திற் கிடக்கின்றனரோ! என் ஆசைத்துணைவர் எவ்விடத்திருக்கின்றனர் என்றுகேட்டவுடன், உக்கிரன் என்னும்பூதவீரன் தென்பாரிசத்தில நூறுயோசனை அளவையிற் பெரியஓர் வடவாலவிருட்சத்தின் அருகே அவர்கள்விழுந்துகிடக்கக்கண்டேன்என்று சொன்னதைக்கேட்டவுடன் தேவர் பதைபதைத்துக் கிலேசித்துச் சகோதரசம்பந்தத்தால் தம்மைச்சூழ்ந்தவர்களெல்லாரும் துக்கிக்கும்படிக்குப்புலம்பி அழுது அத்தலத்தினைக்காட்டென்று சகலரும் தம்மைத் தொடர்ந்து வரச்சென்று அவ்விடத்தில் தம் துணைவர் மாண்டு கிடப்பதனைக் கண்டு அவர்கள் மேல்விழுந்து கல்லும் உருகப் பல பல வாறாகப் பிரலாபித்துக் கடைசியில் அவர்களைத்தாம் எழுப்புவதாக நிச்சயித்து உயிரைக்கொண்டுபோன எமனைக் குறித்து இவ்வாறு பேசுவதாயினார். சிவபிரான் நுதல் விழியிற் சோதிமயமாகத் தோற்றிப் பிரணவப் பொருளைச் சொல்லத்தெரியாத பிரமனைக் காவற் படுத்திச் சிருஷ்டித் தொழிலை நடாத்திய குமாரதேவருடைய துணைவர் என்பதனைக் கூற்றுவன் அறியானோ? மார்க்கண்டேயன், விபுலன், பிங்கலன் என்னும் வேடுவன், குச்சகன் இவர்கள் விஷயத்திற் பட்டபாடுகள் அனைத்தும் தருமனுக்கு யாபகமில்லையோ! சண்முகப் பெருமானுக்கு அந்தரங்கப் பத்தர்களாயிருக்கின்றவர்களுடைய பிராணனையும் நமனானவன் வாட்டிக்கொண்டு போகத்துணிந்தான் என்று இவ்விதங்களாகக் கோபித்துத் தேவரானவர் ஓர் திவ்யபாணத்தை எடுத்து அதின் அலகில் தமநகத்தினால் இயம தருமனுக்கு இவ்விதம் திருமுகம் எழுதுவதாயினார்: வெற்றிவேலாயுத மூர்த்திக்கு இளவலாகிய வீரவாகு, வைவச்சுதப் பட்டணத்திற்கு அதிபனான செங்கோற் கடவுளுக்கு அறிவிப்பதென்னவென்றால், நமது துணைவர் எழுவர் பிராணனையும் கிரகித்துக் கொண்டு போயினாய்! இது தகுதியோ? உடனே அவர்கள் சீவான்மாவை இவ்விடம் சேர்க்கக்கடவையென முடித்து அப்பாணத்தைத் தன் வில்லிற் பூட்டித் தேவர், குமாரதேவரை வாழ்த்திப் பிரயோகித்து

காலத்தில் அது மனோவேகத்தினும் மேலிட்டுப் பறந்து எமபுரம் சேர்ந்து அங்குகொலுவிருக்கும் தருமன் எதிரிற் போய்நின்றது. எமராஜன் அதைக்கண்டவுடன் அதிசயித்து அதைத் தன் கரத்தில் ஏந்திவாசித்து மனம் நடுக்குற்று வீரவாகுதேவருடைய துணைவர் இவ்விடம்வரவில்லையே என்று தன் மகிஷவாகனத்திலேறிச் சூறைமாருதத்தைப்போல வெள்ளியங்கிரியைச்சேர்ந்து பூங்காவுகளிலொன்றில் எழுவரும் களித்திருக்கின்றதைக் கண்டு ஐயரே! உமதுதமயன் வருந்தி உங்களைத்தேடி அலைவதாக நீங்கள் இந்த வைபவங்களை அனுபவித்திருப்பது தகுதியோ! மேலும் என்பிராணனுக்கு வந்திருக்கிறது. ஆதலால் துரிதமாய்த் தமயனிடத்திற்கு வரவேண்டுமெனப் போற்ற அவர்கள் சேனைத்தலைவர்களுடன் அத்தலத்தை நீங்கித்தங்கள் சரீரங்களிற் பொருந்தி நித்திரை தெளிந்தவர்களைப்போல் எழுந்தனர். இச்சுபகரத்தைக் கண்ட தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். எழுவரும் ஓடித்தம் தமயன் திருவடிகளிற் பணிந்த காலையில் வீரவாகுதேவர் ஆனந்தவாரியில் மூழ்கினவராய் அவர்களைத் தழுவி உல்லாசமாயிருக்கின்ற சமயத்தில் தருமராஜன் இளையபெருமானுக்குச் சமீபத்தில் வந்து சேவித்து அடியேன் மேற்கோபங்கொள்ள வேண்டாமென்று சங்கதிகளை இயம்பி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனன். இச்சம்பவங்கள் அனைத்தையும் பார்த்திருந்த அவுணதூதர்கள் சூரபதுமன் பாதாரவிந்தங்களிற் போய்விழுந்து தங்கள் விழிகளில் நீரைப்பெருக்கிப் புலம்பிச் சுவாமி! தேவரீர் திருக்குமாரனாகிய அக்கினிமுகன் அகோர யுத்தங்களைச் செய்து வீரவாகுதேவரால் மடிந்தனன் என்று சொன்னவுடன் அவனுக்குப் புத்திரசோபம் மேலிட்டுப் பெருங்காற்றின் மோதலினாற்சாயும்பனையைப் போலச் சோர்ந்து குப்புறவிழுந்து புத்திரனை நினைந்து நினைந்து பிரலாபிக்கலானான். அத்தருணத்தில் அக்கினி முகனைப்பெற்ற பதுமகோமளைபந்துவர்க்கங்கள் மந்திரி பிரதானிகள் சேனைத்தலைவர் முதலானவர்கள் முகத்தினும் வாயினும் வயிற்றினும் அறைந்து கொண்டு கடல் உடைந்ததை நிகர்த்துக்கதறிய விதங்களைச் சொல்லியும் முடியுமோ?

"மூவாயிரர் வதம்."

இந்தப் பிரகாரம் சூரன் முதலானவர்கள் வருந்துகின்ற செய்தியை அவனுடைய மூவாயிரம் பிள்ளைகள் கேட்டவுடன் அவர்கள்

மானமும் கோபமுங்கொண்டு தங்கள் பிதாவினிடத்திற்கு வந்து அவனுக்குப் பற்பல தயிரியங்களை யெல்லாம் எடுத்துரைத்து அவன் துக்கத்தைப் போக்கித் தங்களுக்கு யுத்தத்திற்குச் செலவு கொடுக்க வேணுமென்று அவனிடம் உத்தரவுவாங்கி அவர்கள் அனைவோரும் போர்க்கோலங் கொண்டு சதுரங்க சேனைகளும் பெரும்புறக்கடலைப் போல ஆர்ப்பரித்துத் தங்களைச் சூழ்ந்து இரணக்களவெல்லைக்குச் சமீபத்தில் மேலிட்டுவருவதனைப் பூதவீரர் கண்டவுடன் பாதகர்மேலும் மேலும் வருகின்றனரென்று மகாக்கோபங்கொண்டு இராட்சதப் படைகளுடன் கைகலந்து பற்பல விதங்களாக அகோரயுத்தஞ் செய்த காலையில் இருதிறச் சயினியங்களிலும் அனேகர் மாண்டார்கள். இதைக்கண்ட மூவாயிரம் இராஜகுமாரர்களுக்கு அதிககோபம் பிறந்து தங்கள் தனுசுகளினின்றும் பாணவருஷங்களைப் பொழிந்து பூதரைவாட்டும்போது பூதத்தலைவர்களும் உக்கிரமாய்த் தங்கள் வில்லுகளில் அளவிறந்த சரங்களைச்சந்தித்து விட்டுப்பெரிய போராட்டம் செய்தார்கள். இலட்சரும் பகைவர் முனையில் வந்து சேர்ந்து தம் பாணங்களை வருஷித்துக் கர்ச்சித்ததனை மூவாயிரவர் கண்டு கோபித்து அவர்கள் ஏறியிருந்த தேர்கள் அனைத்தையும் பொடிப்படுத்திக்கொக்கரித்தனர். அக்காலத்தில் இலட்சர்கோபித்துச் சரங்களைத் தூண்டி மூவாயிரவர் தனுசுகளைக் கண்டித்துப் புரவிகளுடன் தேர்களையும் தும்சம்செய்து சிருங்காதம் செய்தனர். பின்னும் அவர்கள் மேலிட்டுவருவதனை இலட்சர்கண்டு பலவாறாக அவர்களுடன் தங்கள் சயினியங்களுடன் கலந்து கருங்கடலும் திருப்பாற்கடலும் பகைத்துத்திரைகளை வீசிக்குமுறிப் போராடுவதைப்போல இருதிறத்தவரும் கொதித்து இடசாரி வலசாரியாக யுத்தஞ்செய்த காலையில் மூவாயிரவர் செய்த அனர்த்தங்களினால் வீரர் வலிகுறைந்து விஜயனென்பவனைத்தவிர மற்றவர் பின்னிட்டனர். சிவபிரானுடைய அனுக்கிரகத்தைப் பெற்ற விஜயனென்பவன் மூவாயிரவரைச்சாடிச் சாடிக்கொன்றபோது அவர்களனைவோரும் பிரமனுடைய வரமுயற்சியினாற் பழயபடிக்குத் தேகங்கள்கூடி உயிர்பெற்றெழுந்து வந்து வந்து போராடுவதனால் விஜயன் கைகால் ஓய்ந்து பிரமித்து இதற்கு என்ன செய்வேனென்று கலங்கி எமதையனாகிய சிவசுப்பிரமணியக் கடவுளைத்தியானித்துத் தன்குறைகளை முறையிட்டுப் போற்றுவந்தக் திரு

பாலிதியாகிய சண்முகப் பெருமான் அதனை திருவுள்ளத்திலறிந்து விஜயன் விழிகளுக்கு மட்டும் தோற்றுவதாகி அகோரவீரபத்திராஸ்திரத்தை அளித்து மறைந்தனர். விஜயன் அவ்வஸ்திரத்தைத் தொழுதுவாங்கிய சமயத்தில் மூவாயிரவரில் ஒருவன் மாயப்படையைச் செலுத்திவிட்டனன். அது மேலிட்டுவருவதனை விஜயன்கண்டு தனது வீரபத்திரா ஸ்திரத்தைப் பூசித்துச்செலுத்தினன். அது வெளிப்பட்டவுடன் பகைவன் படையினது மாயைப் பெருக்கினையும் கவளீகரஞ்செய்து மூவாயிரம் இராஜகுமாரர்களையும் வாட்டிக்கொன்று வானகங்கையில் மூழ்கிவீரனிடம் திரும்பிவந்து சேர்ந்தது. தேவர்கள் அவ்வீரன் புகழைக் கொண்டாடிக் கற்பகமலர்களைச் சொரிந்தார்கள் இக்காரணங்களைத் தப்பியோடிய இராட்சதர் சூரனுக்குத் தெரிவித்தகாலையில் அவன் புத்திரசோபத்தில் அழுந்தி மற்றனைவோர்களுடன் புலம்பிப் பிரலாபித்துக் கொண்டிருந்தான்.

"தருமகோபன் வதம்."

அந்தச் சமயத்தில் தருமகோபனென்னும் பெரிய மந்திரி வந்து இராஜாதிராஜனைச் சேவித்துத் தேவரீர் திருவுளத்தில் இத்தகைய சோபத்தைக் கொண்டீரானுற் சத்துருக்கள் கரங்களைக்கொட்டி நகைத்து யேசுவார்கள். எது வந்தாலும் லெட்சியமின்றி வெற்றியை அடைய வேண்டும். நம்மவர்கள் உயிரை அஞ்சாமற் ரெகித்துப்போன எமன் எங்கே தப்பிப்போகப் போகிறன். திரும்பச் சிருஷ்டிக்கப் பிரமனும் காத்துக்கொண்டிருக்கிறன் என்று இவ்விதங்களில் தேற்றிய காலத்திற் சூரன் சோபங்கொஞ்சந்தீர்ந்து பின் திடீரென்றெழுந்து இதோ சத்துருக்களை காணேனென்று திரும்புவேனென்று பாதசாரியாகச் சென்ற சமயத்தில் தருமகோபன் சூரனுக்கு எதிர் சென்றுதாழ்ந்து தேவரீர் அடியேனுக்கு அதைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று வருதிவாங்கித் தனக்கு இளையமந்திரிகள் சகிதம்புகசன்னத்தனைச் சகல சயினியங்களுடன் பிரயாணித்துத் தனதுபுண்டரீகமென்னும் யானையின் பிடரியில் இந்திரனைப்போல் ஆரோகணித்து வருவதாயினன். அதனை எதிர் பார்த்துக்கொண்டிருந்த பூதவீரர்களின் விருப்பையும் படைவீரர் செருக்கையும் இலட்சர் கெம்பீரத்தையும் எண்மர் சௌரியங்களையும் வீரவாகுதேவர் வீரசிங்கத்தைப்

போல் தனுர்ப்பாணியாய் விளங்குவதனையும் வந்த தருமகோபன் கண்டவுடன் மதிமயங்கி இன்று நாம மடிவது நிச்சயமென்று நினைத்து அப்பால் தன் மனதைத்திடஞ் செய்து கொண்டு சேனைகளுக்கு மத்தியில் நடந்தனன். உடனே இரவும் பகலும் எதிர்த்ததைப்போலக் கொடிய இராட்சதச் சேனைகளும் நல்லொழுக்கமுள்ள பூதப்படைகளும் நெருங்கி வடவைபோற் சீறிக்கடலும் அஞ்சக்கொக்கரித்துச் சண்டைசெய்யத் தொடங்கினர்.

அக்காலையில் இருதிறச்சேனைகளிலும் அணவற்றவர்கள் மடிந்து போனார்கள். பின் மந்திரிகள் சிலருக்கு ஆற்றாமல் இலட்சரிற் சிலர் வலிகுன்றிப் போனதைக்கண்ட வெய்யவனென்னும் பூதவீரன் மற்ற மந்திரிக் கூட்டமனைத்தையும் நிலத்திற் புரளவாட்டி வெற்றி கொண்டனன். புண்டரீகமென்னும்யானையானது கோபங்கொண்டுகுமுறித்த தனது துதிக்கையாலும் கால்களாலும் நாலு கொம்புகளாலும் கணக்கிறந்த பூதர்களை அமோகமாகச் சாடிக்கொன்று வீறுப்புடன்வருகின்றதை இந்திரனென்னும் பூதவீரன் எதிர்த்து ஓர் பாணத்தினால் அதன் மத்தகத்தைப் பிளந்தனன். அந்த யானையின் சோபத்தைக் கண்ட தருமகோபன் இந்திரனுடன் போராடி அவனை மரணமூர்ச்சையாக்கிவிட்டனன். வீரவாகுதேவர் அதைக்கண்டுதருமகோபனுக்கு முன்வர அவன் தனது வேலொன்றையெடுத்து அவர்பேரில் விடுத்தனன். தேவர் கொடிய பாணங்களைச் செலுத்தினர். அவைகள் வேலைப்பொடியாக்கித் தருமகோபன் மார்பையும் ஊடுருவிச்சென்றன. உடனே அவன் மயங்கியிருந்தனன். அதைக்கண்ட புண்டரீகம், தேவருடையதேரின்பேரில் வந்துமோதியது. தேவர் அந்த யானையின் துதிக்கையைப்பிடித்து அதின்மத்தகத்தில் தாக்கிச்சுழற்றி மேலேவீசினர். அதன் பேரிலேறியிருந்த தருமகோபனுடன் அது உயரப்போய்க் கீழேவிழுந்து சோபமடைந்தது. தருமகோபன் மூர்ச்சையடைந்து பின் தெளிந்து வச்சிராயுதத்தைக் கரத்திற்கொண்டு தேவர் மார்பில் வீசினன். வீரன் அதனைத்தமது திருக்கரத்தினாற் பற்றி வலிகொண்டுபகைவன் மார்பில்மோதினர். அத்தாக்கலில் அவன் ஓவென்னும் இரைச்சலுடன் நிலத்தில் விழுந்தான். தேவர் உருத்துத்தமது வலிய காலினால் அவனை உதைத்து உருட்டியபோது அவன் தலைபிளந்து

உதிரங்களைக் கக்கிக்கொண்டு மாண்டனன். அத்தருணத்திற் புண்டரீகமானது சோபம் நீங்கிக்களித்து வீரவாகுதேவரை வந்துபணிந்து அடியேன்மீது கோபங்கொள்ள வேண்டாம் நான் அஷ்டதிக்குயானைகளில் ஒன்று இந்தப்பாதகன் என்னைப் பலவந்தமாகப் பிடித்துத் தனக்கு வாகனமாகக்கொண்டு சகலரையும்வென்று அவர்களைச்சிறையிலும் அடைத்து இம்சித்திருந்தான். இப்போது நான் தேவரீரைத் தெரிசிக்கப்பெற்றுக் கிருதார்த் தனுமானேனென்று அவரிடம்உத்தரவு வாங்கிக்கொண்டு தன்இருப்பிடம் சேர்ந்தது. இச்சம்பவங்களைத் தூதுவராற் சூரன் கேள்விப்பட்டுச் சித்தம்கலங்கி அசை வற்றிருந்தனன்.

"பானுகோபன் வதம்."

சூரன் திகைத்திருக்கின்ற சங்கதியைப் பானுகோபன் கேள்விப்பட்டுத் தன்பிதாவினிடம் வந்து ஐயனே! எனது வார்த்தைகளைச் சற்று கோபங்கொள்ளாமற் கேட்டருளவேண்டும். நான் மாயைப்படையாற் சத்துருக்கள் அனைவோரையும் சுத்தோதகத்திற் சேர்த்து வைத்திருந்ததனைச் சுப்பிரமணியன் தனது வேலினால் தருவித்துக் கொண்டனன். இரண்டாம்நாள் தேவரீரே அவனுடன் யுத்தத்திற்குப் போய்த்தோற்றுத் திரும்பிவந்தீர். தாருகனையும் கிரவுஞ்சனையும் அவன் வேலினாற் பிளந்தெரிந்தனன். பல பிள்ளைகளையும் பந்துக்களையும் வலியமந்திரிகளையும் கணக்கி லடங்காத சதுரங்கசேனைகளையும் அனியாயமாய்ப் பறிகொடுத்தீர். இனிமேலும் குமாரசுவாமியைப் பகைத்துக்கொள்ளாமல் தேவர்களின் சிறையைத் தவிர்த்துக் கிருபாநிதியாகிய கந்தசுவாமியினிடமும் பலவரங்களைப் பெற்று நாம் வெகுகாலம் ஜீவித்திருக்கலாமென்று எடுத்துச்சொல்லிய பானுகோபன் பேரிற் சூரன் கோபங்கொண்டு இன்னும் வலிகுறைந்திருப் பேனுயினும் கீர்த்திகுறையும் படிக்குத் தேவர்களைச் சிறைவிடுவிப்பேனோ! மானத்தைப் இழந்து பழிக்காளாவேனோ! பாலனுக்கும் தூதனுக்கும் பூதங்களுக்கும் அஞ்சி நல்லவார்த்தை சொல்லவந்தாய்! நீ போகங்களை அனுபவித்துச் சுகமாய்ப்போய் உன் அரமனையில் வாழ்ந்திருக்கலாமென்றான். பானுகோபன் விதிவலியை வென்றவர்கள் யாருமில்லையென நிச்சயித்துக்கொண்டு பிதாவே! என்பேரிற் கோபங்கொள்ள வேண்டாம். இதோ நிமைப்போதிற் சத்துருக்களை வென்று வருகிறே

னென்று அவனுக்குத் தேறுதலை சொல்லித்தான் போர்க்கோலங் கொண்டு பெரும் புறக்கடலையொத்த சயினியங்களையும் திரட்டிக்கொண்டு யுத்தபூமியில் வந்து சேர்ந்தான்.

அப்போது இருசயினியங்களுங் கலந்து போராடி இராட்சதர்கள் பூதருக்கு ஆற்றுது பின்வாங்கி யோடலதாயினர். பானுகோபன் அதைக்கண்டு தனது வில்லிற்சோணைப் பெய்யலைப்போலப் பாணகோடிகளைப் பிரயோகித்துப் பூதர்களை நிலைகுலைத்தனன். வீரவாகுதேவர் அந்த வெற்றியையும் இராட்சதசேனைகள் மேலிட்டுவருவதனையும் பார்த்துத் தமது சரவருஷங்களைப் பெய்து பானுகோபனுடைய சதுரங்க சயினியங்களையும் ஏககாலத்திற் சின்னபின்னப்பட வாட்டினர். சூரியகாதகன் கோபங்கொண்டு வீரவாகுதேவருக்குமுன் வந்து அடா தூதனே! நமதுசமூத்திம்போன்ற சதுரங்கசேனைகளையும் முன்பின் பாராமற்கொன்றனை. இதோ உன்னைக் கொல்லுகிறேனென்று ஆயிரங்கணைகளையேவி வீரவாகுதேவர் மார்பில் ஊடுருவிச்செல்லவிட்டான். அதைத்தேவர் பாராட்டாமல் தயிரியமாகக்கர்ச்சித்து ஆயிரம் பாணங்களை யேவிப் பானுகோபன் புயங்களைச் சல்லடையாகத்துளைத்தனர். உடனே பானுகோபன் நூறு அர்த்த சந்திரங்களினுல் தேவருடைய கரவில்லைக் கண்டித்தெறிந்தனன். வீரன்திடசித்தனுய்க் கூரிய வேலொன்றெடுத்துவிட அது பாதகன் நெற்றியில் தடாரித்து உருவிப்போக அவன் கணப்போது மதிமயங்கி நின்றனன். தேவர் வேறு வில்லெடுத்து வாயுவாஸ்திரத்தை விடுத்தனர். பானுகோபன் தெளிந்து வாயுப்படையையே போக்கி அதை மறித்தனன். உடனே வீரன் சீறி ஆக்கினே யாஸ்திரத்தை விட்டனர். பானுகோபனும் அந்தத் தேவபாணத்தையே விட்டு அதைத்தடுத்துக் கைவேகமாகச் சூரியாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். தேவர் அதைக்கண்டித்து விட்டனர். பானுகோபன் சீறிப்பிரமசரோருகப்படையை யெடுத்துவிட அது குமுறிக்கொண்டு வருவதனைத் தேவர் கண்டு தாமும் அதேபடையை யெடுத்து விட்டனர். அவைகளிரண்டுங் கொடிய போரைச்செய்து திரும்பி விட்டன. இராஜகுமாரன் கோபித்து இதனுல் நாசமடையக்கடவையென்று நாராயணுஸ்தியத்தைப் போக்கினுன். தேவர் துரிதமாய்க் கேசவன்படையைப் போக்கினுன். அவ்விரண்டும் சொல்லிமுடியாத போரைச்செய்து மின்னலைப்போல் மறைந்துபோயின.

அதைக்கண்ட பானுகோபன் மனம் வருந்தி ஜகன்மோகன மந்திரத்தை உச்சரித்துத் தேருடன் யாவருக்குந் தெரியாமல் மறைந்து கொடிய பாணங்களை ஒன்றின்மேலொன்றாகச் செலுத்தத் தொடங்கினன். பாதகன் தூவுகின்ற வாளிகளினால் வீரவாகுதேவர் எண்மர் இலட்சர் பூதப்படைகள் தங்கள் தேகமுழுதும் உதிரவெள்ளம் பெருக்கெடுத்து வருந்துவதானார்கள். தேவர் கோபங்கொண்டு ஞானப்படையைப் பிரயோகித்தனர். உடனே இராஜ குமாரன் மாயவஞ்சகங்களெல்லாம் பறந்தோடிப் பானுகோபனும் ஆகாயத்தில் இரதாரூடனாகத் தென்பட்டான். தேவர் ஆகாயத்திற் கிளம்பி அவனைச் சந்தித்து அடா கள்வனே! உன்னைக் கொல்லாமல் விடேனென்று பின் ஒருவர்க்கொருவர் சரமாரிகளைச் சொரிந்து இடசாரி வலசாரியாகச்சுழன்று கடும்போரைச் செய்தகாலையில் ஆகாயவாசிகள் இவர்களின் சௌரியங்களுக்கு இணைஎவருமில்லை இப்படியுத்தம்எங்குங்கண்டதும் கேட்டதும் இல்லை எனக்கொண்டாடினார்கள். அக்காலையிற் பானுகோபன் மிஞ்சித் தேவர்கரவில்லைக் கண்டித்தனன். தேவர் வேறு வில்லெடுத்து அவன் தேரைப்பொடி செய்தனர். பாதகன் தேவர் மார்பைத் துளைத்துத் தன் தோளைத்தட்டினன். தேவர் வருந்திக் காலாந்தகனைப்போற் சீறிப் பானுகோபன் வயிரமுடியினைப் பொடியாக்கினர். பானுகோபன் தேவருடைய வயிரக்கவசத்தைக் கண்டித்தெறிந்தனன். தேவர் இவன் வில்வன்மை வெகு நேர்த்தியென நகைத்துப் பிறைவாளிகள் ஏழாற்பானுகோபன் கரத்தனுசை வெட்டித்தள்ளினர். பானுகோபன் வேலாயுதத்தைச் சுழற்றி வீரனைக்கொல்லக்கடவையென விட்டெறித்தான். அது வருவதனைத் தேவர்கண்டு பல பாணங்களை அதன்பேரில்விட்டும் அவைகளை அது கவளீகரஞ்செய்து தம்கிட்ட நெருங்கிவந்தது. உடனே தேவர் தமதுஉடைவாளை உருவிக் குமாரதேவரைச் சிந்தித்து ஓங்கி அந்தவேலை இருதுண்டாக வெட்டித்தள்ளினர். அதைக்கண்ட தேவர்கள் வீரனென்பது உமக்கே தகுமெனத் தேவரைக் கொண்டாடி மலர்களைச் சொரிந்தார்கள். அதனைச் சூரன் பிள்ளை கண்டு மனம்பதைத்து இவன் சவுரியம் வெகு நேர்த்தியென ஆச்சரியப்பட்டுத் துரிதமாய் வரப்பிரசாதத்திற் பெற்ற தன் வாளாயுதத்தை உருவிக்கொண்டு மின்னலைப்போல் இடம் வலமாகச் சுழற்றித்தம்மேல் மேலிட்டுவருவதனைத் தேவர்கண்டு துரித

மாய் அளவற்றபாணங்களைச் செலுத்திப் பாதகன் மார்பைப் பத்து லாகப் பிளந்தனர்.

பானுகோபன் அந்தவருத்தத்திற்கும் அஞ்சாமல் மேன்மேலும் பாய்ந்து வந்து தேவர்காத்தில் விளங்கியிருக்கும் மேருபோன்ற வில்லை ஒரேவீசலில் இரண்டு துண்டாக்கிப் பின்வாங்கினன். அதைக்கண்டதேவர் வீரனென்பது இவனுக்கே தகுமென்று பின் தமது வாளாயுதத்தை உருவிக்கொண்டு சூறுவளிபோலச் சுழன்று பானுகோபனுடன் வாட்போர் செய்தகாலத்து அவன் கைமிஞ்சித்தேவர் தோளில் வெட்டினன். அக்காயத்திலிருந்தும் கொப்பளித்த உதிரவெள்ளத்தைக்கண்ட தேவர்கள் பயந்து தேவர் இளைப்பரோவென்று வியாகூலப் பட்டிருக்கும்போது வீராதி வீரன் சண்முகதேவர் பாதங்களைத்தியானஞ் செய்து பாய்ந்து தம்வாளாயுதத்தினுற் பகைவன் பருத்த தோளைவெட்டி நிலத்தில் தள்ளினர். பானுகோபன் பின்னடையாமல் வாளாயுதத்தை மற்றொருகாத்திற் கொண்டு உருத்துப்பாய்ந்து வருவதனைக்கண்ட தேவர் அவனைமெச்சித் துரிதமாய்த்தம் வாளை வீசி அவனுடைய மற்றக்காத்தையும் துண்டித்தனர். பானுகோபன் வேறே சண்டைகொடுக்க வகையில்லாதவனுய் மாயைகொடுத்தபடையைப் பிரயோகிக்க நினைந்ததைத் தேவர் தெரிந்தவுடன் அதற்கிடங் கொடாமல் துரிதமாய்த்தமது வெற்றிவாளின் ஒரேவீச்சால் அவன் பாரித்த சிரத்தைக்கண்டித்துத் திடுமென்று பூமியில் தள்ளினர். இந்த ஜெயத்தைக் கண்ட தேவர்களும் ரிஷிகளும் ஆனந்தக்கூத்தாடி மலர்களை வீரவாகுதேவர் பேரிற் சொரிந்து வீராதி வீரனென்பது உமக்கே தகுமெனப் புகழ்ந்தார்கள். பூதப்படைகள் எண்மர் இலட்சர் பகைவன் தேகம் வெட்டுண்டு நிலத்தில் விழுந்ததைக்கண்டு அடங்காத ஸந்தோஷத்தாற் கூச்சலிட்டுக் கூத்தாடி வீரவாகுதேவரை வந்தடைந்து புகழ்ந்தார்கள். தேவரும் மனமகிழ்ச்சியுடன் தம்பியர் இலட்சர் முதலானவர்கள் தம்மைச் சூழ்ந்துவர இரணக்களவெல்லையைக்கடந்துபோய் நவரத்தினமயமாய்விளங்கும் பாசறையைச்சேர்ந்து அங்கு திருச்சபையிற் பிரமன் விஷ்ணு தேவேந்திரன் முதலானவர்கள் சூழ்ந்துபோற்றச் சிங்காசனத்திற் கோடி சூரியப்பிரகாசமாக வீற்றிருந்து வார்த்தையாடிக் கொண்டிருந்த சண்முகநாதரை நேத்திரோற் சவமாகத்தெரிசித்துச் சேவித்தெழுந்து போற்றி நிற்கின்ற

தமது மனதிற் கினியதோழனைத் தேவாதிதேவன் பரிவாகப் பார்த்து ஐயனே! இரண்டு தினங்களாக மிகவும் வருந்திச் சூரன் பிள்ளை முதலாகிய அவுணவீரரைக் கொன்று உலக உபாதிகளை ஒழித்து நிலை பெறச்செய்தனை, இதைக்குறித்து மிகவும் களித்தனம். ஆகையால் உனக்கு வேண்டும் வரங்களைக்கேட்கக் கடவையெனத் திருவாய்மலர்ந்தனர். வீரவாகுதேவர் கர்த்தனே! உமது கடாக்ஷமின்றி ஒருகாரியம் முடிவதுண்டோ! தேவரீர் பாதாரவிந்தங்களைப் பக்தி பூர்வமாக எக்காலத்தினும் வழிபட்டுப் போற்றும் சிறந்தவரத்தினையே விரும்பினேன் என்று வேண்டிக்கொள்ளும் துணைவன்பேரிற் கிருபாகரன் பரிபூரண கடாக்ஷத்தைப் பாலித்து உன்மனக் கருத்தின்படிக்கே தந்தனமென்று அவருக்கு அமுதவாக்களித்தனர். மற்றத் தம்பியரும் ஆக்குமரவேளிடத்திற் பற்பல வரங்களைப் பெற்றார்கள்.

இவைநிற்கப் பானுகோபன் களத்திற்பட்டத்தைத் தூதுவராற் சூரன் கேள்விப்பட்டுச் சிங்காதனத்திலிருந்து திடீரெனக் கீழேவிழுந்து பிராணன் நிலைபெறாமல் அலைந்து மரணமூர்ச்சியாய் அசைவற்றுக்கிடந்தனன். சபையோர்கள் பெருந்துக்கத்துடன் அவனுக்கு உபசாரங்களைச் செய்துவர வெகுநேரத்திற்குப் பின்பு அவன் விழிகளைத் திறந்து பார்த்துப் பலவாறாகப் பிரலாபிப்பதானான். அவுணவீரர் சிலர் வெட்டுண்டு கிடக்கின்ற பானுகோபனுடைய தேகத்தை யெடுத்துக்கொண்டு சூரன் முன் வைத்தழுதார்கள். இராஜ பரமேஸ்வரன் புத்திரன் உடலைக்கண்டு" கடந்துளோர்களுங் கடப்பரோமக்கண்மேற் காதல்" என்றபடிக்குத் தேகத்தின்பேரில் அடித்து விழுந்து துக்க சாகரத்தில் அழுந்தி வருந்தியகாரணங்களை இன்னவிதமெனச் சொல்லி முடிவதோ! மகன் இறந்த சங்கதியைக் கேட்டு அம்புபட்டமயிலைப் போலப் பதுமகோமளை யென்பவள் துடிதுடித்துப் புலம்பிவாடினள். பானுகோபனுடைய துணைவியரும் பந்துவர்க்கங்களும் கன்றைப்பறிகொடுத்த பசுவைப்போலப் பட்டணத்துச் சனங்களுடன் ஓவெனப் புலம்பிக் கொண்டிருந்தார்கள். அது சமயத்திற் சூரன் ஆபிசாரவேள்வியை முடித்து இறந்துபோன பிள்ளைகள் முதலானவர்களை யெழுப்பக்கடவேன். அதுவரையிற் குமாரன் உடலை எண்ணெக் கொப்பரையிற் பதனப்படுத்தக் கடவீர்களெனக் கட்டளையிட்டு மற்றச் சிலதூது

வரைக் குறித்து என் துணைவன் சிங்கமுகனை இந்நிமிஷத்தில் அழைத்து வாருங்களெனப் பணித்தனன்.

சிங்காமுகாசுரன் வதம்.

உடனே தூதர்கள் ஓடோடியுமோடி ஆயிரஞ்சிரங்களையுடையசிங்கமுகன் வாசஞ்செய்திருக்கும் ஆசுரமென்னும் பட்டணத்திற்குச் சென்று சூரன் தம்பியைவணங்கி அகண்டமண்டலா தீஸ்வரனாகிய தமயனார் தேவரீரை அதிவேகமாக வரும்படிக்கு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாரென்றார்கள். அவுணராஜன், அப்படி யென்னபுதுமை யென்றனன். தூதர்கள் பயந்து ஆதியோடந்தமாக நடந்த சவிஸ்தாரங்களை யெல்லாம் விடாமல் எடுத்துரைத்தார்கள் அவைகளைச்சிங்கமுகன் கேட்டுமானமுந்துயரமும்மேலிட்டுப்பெருமூச்செறிந்துதனதுசகலசேனா சமுத்திரங்களுடன்தானும் யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டுத் தன் தமயன் பாதாரவிந்தங்களிற்சீக்கிரம் வந்து சேவித்துத்தேவரீர் இவ்விதத் துக்கத்தையும் அனுபவிக்க வேண்டியகாலம் நேர்ந்ததோவென்று பலவாறாக எண்ணமிட்டு இதனைச்சொல்லுவான். இராஜாதிராஜனே! இப்படிச் சகலரையும் மாளக்கொடுத்துத் தனியனாகத் திகைத்திருக்கின்றீர். தமயனே! கெடுமதிகண்ணுக்குத் தோன்றாமல் இத்தகைய துன்பத்திற் கொண்டு வந்து விட்டது. ஆதியந்த மற்ற சுயஞ்சோதிக் கடவுளை மதியாமற் பாலன்பாலனென்று இகழ்ந்தபடியினாலே தான் இவ்வளவு சீரழிவுகளெல்லாம் நமக்கு வந்துற்றன நானும் இந்த நிமிஷத்திற் சேனைப்பெருக்குடன் போய்ச் சிவசுப்பிரமணியருடைய வெற்றி வேலாயுதத்திற்குத் தப்பிப் பிழைப்பேனாகில் இவ்விடம் வந்து உம்மைக்காணப் பெறுவேனென்று அவ்விடத்தில் நிற்க மனமில்லாதவனாய் வெளிவந்து தனது மதிப்புக்கடங்காத சதுரங்க சேனைகளுடன் சகல வுலகங்களுந் தத்தளிக்க யுத்தத்தை நாடிவருவதாயினன். அதனைப் பிரமன் விஷ்ணு தேவராஜனாதியர் கண்டு நடுநடுங்கி வெற்றி வேலாயுதக் கடவுளை வந்து வணங்கிச் சிங்கமுகன் இதோ வந்துவிட்டான் வந்து விட்டானென அவன் பராக்கிரமங்களையும் எடுத்துக் கூறி இவனைச் சுலபமாக நினைக்கப்போகாது கர்த்தனே! அவன் ஆணவத்தை அடக்கிக்கொன்று எங்கள் மனக்கவலையைப் போக்கியருள வேண்டுமென்று பிரார்த்தித்த காலையிற் சண்முகதேவர் அவ்

வாறே செய்யக்கடவோமென்று அவர்களைக் கைஅமர்த்தி அருகில் நின்ற தம் வீரவாகுதேவரைப் பார்த்தனர். அவர் சுவாமியைச் சேவித்து அடியேனுக்கே துணைவருடன் சென்று மேலிட்டுவரும் பகைவனை இரணக்களக்காளிக்குப் பலிகொடுத்து வரத்திருவருள் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்த வீரன் தீரத்தக்குமெச்சிப் பகவானவர் அப்படியே பாதிச்சயினியங்களை அழைத்துப்போய் நீ வெற்றியுடன் திரும்பக்கடவை யெனப்பணிக்கத் தேவர் உற்சாகத்துடன் அவ்விதமே புறப்பட்டு வருவதனைக் கண்ட சிங்கமுகன் சீறி நெருங்கினன்.

இவ்விருசேனை சமுத்திரங்களும் அடர்ந்து ஒருவருக்கொருவர் பின்னிடையாமற் கடும்போரைச் செய்து இருபக்கத்தினும் அனேகர் மடிந்து குவிந்தார்கள். அத்தருணத்திற் சிங்கனென்னும் பூதவீரன் தண்டமொன்றைக் கரத்திற்கொண்டு இராட்சதசேனைகளை அமோகமாய்ச் சாடிக்கொன்று வருவதைத் தசமுகனென்னும் அவுணவீரன் கண்டு பகைவன் முனையிற் பாய்ந்து கணக்கிறந்த பாணங்களை அவன் பேரிற் சொரிந்தகாலையிற் சிங்கன் அவைகளை யெல்லாம் தன் தண்டத்தால் தட்டிவிட்டுப் பின் ஒரு அடியால் தசமுகன் மார்புக்கவசத்தைப் பொடிசெய்தனன். அவன் கதாயுதத்தைச் சிங்கன் மேல் வீசினன். சிங்கன் நகைத்து அசட்டையாய் நிற்க அது அவன்மாற்பில் தாக்கிப் பொடியாய் வீழ்ந்தது. இராட்சதப் பாதகன் இவன் திண்ணியன் போற் காணப்படுகிற தென்று அடாபயலே! இதற்குத் தப்பித்துக் கொள்ளென்று கணிச்சியை எடுத்து வலிகொண்டெறிந்தான். வீரன் பயப்படாமற் பாய்ந்து அதனை ஓடித்தனன். அதனைக்கண்ட பகைவரும் அவன் வலிக்குப் பிரமித்துப் பயந்திருந்தார்கள். தசமுகன் மற்றொருகணிச்சியை எடுத்து வீசினன். சிங்கமுகன் நகைத்துச் சக்கரம் ஒன்றையேவி அதைத்துண்டாக்கினன். அப்பால் தசமுகன் வேகமாய்ப் பாய்ந்து தனது கதையினற் சிங்கமுகன் மார்புபிளக்க ஓங்கி அடித்தனன். சிங்கமுகன் அதைப் பொறுத்துக்கொண்டு உடனே அவன் மார்பில் வலிகொண்டறைந்த அறையினல் தசமுகன் திடீரென வீழ்ந்து வதைத்துக்கொண்டு மாண்டனன். உடனே அருக்கனென்னும் பூதவீரன் அவுணச்சேனைகளைச் சாடிக்கொல்வதனைத் துன்முகனென்னும் அவுணவீரன் கண்டு

இவர்களை மாயைவல்லபத்தாற்கொல்வேனென்று சுந்தரபதங்கமென்னும் மந்திரத்தை உச்சரித்து அதின் முயற்சியினால் ஒவ்வொரு பூதருக்கு நூறு நூறுவராகத் தோற்றிப் படாதபாடுகளைப் படுத்திவைப்பதானதைக் கதிரவனென்னும் மற்றொரு பூதவீரன் கண்டு யோசித்து ஞானப்படையை விட்டுப்போக்கினன். துன்முகன் மாயை ஒழிந்ததற்குக் கோபித்துக் கதிரவனுடன் போராடி அப்பால் இளைத்துப்பூதர்கள் கைகொட்டிச் சிரிக்க ஓர் மாயமந்திரத்தால் மறைந்தோடி ஒளித்தனன்.

அது கண்ட சிங்கமுகன் கோபநகைசெய்து பகைவர்மீது சீறித் தன் தேரைத்துரத்தி வந்து தோற்றுவதைப் பூதர்கள் கண்டு இவன் மகா பராக்கிரமசாலி யென்றாலும் ஒரு கைபார்ப்போமென்று பர்வதங்களையும் மரங்களையும் சூலம்தண்டம் எழு மழு இருப்புலக்கை வளைதடி முதலிய படைகளையும் அபரிமிதமாகச் செலுத்திய காலையிற் சிங்கமுகன் பெருமூச்செறிந்தனன். அந்த மூச்சுவேகத்திற் பூதர்கள் வீசிய விருட்சங்கள் படைகள்யாவும் சுழற்காற்றிற் பட்ட சருகுகளைப் போல நாஞபக்கங்களிலும் சிதறிப்பறந்தோடின. அதைக்கண்ட பூதர்கள் இது வென்னபுதுமையெனப் பிரமித்து மறுபடியும் அமோகமாகப் படைகளைச் செலுத்த அவைகளும் அவன் மூச்சுக்கு ஆற்றுமற் பறந்தோடி வீணாகிவிட்டன. பூதர் கலங்கிவாடினார்கள். தேவர்கள் பட்டவருத்தமும் கொஞ்சமல்ல இப்படிக்கான சமயத்திற் சிங்கமுகன்தன்தேரை விட்டு நிலத்திற் குதித்துச் சூறாவளிபோற் சுழன்று தடவையொன்றுக்குப் பல்லாயிரம் பூதரை வாரி வாரி அற்புதமாகப் பலவிதங்களிலுங் கொன்று மாய்ப்பதாயினன். அத்தொகை இவ்வளவெனச் சொல்லிமுடியாது. அந்தச் சமயத்தில் தழற்கண்ணனென்னும் பூதவீரன் முத்தலைச் சூலமொன்றை அவன் மார்பிற்கிலக்காகப் பிரயோகித்தனன். சிங்கமுகன் அதைக்கண்டு நகைமுகனாய்ச் சும்மாயிருக்க அந்தப்பாணம் வந்து அவன் மார்பிற் பட்டுப்பொடியாய் வீழ்ந்தது பூதவீரன் அவன் தவமகிமைகளை மதித்துப் பின்னும் பின்னிடையாமல் தண்டாயுத மொன்றினால் அவன் சாரதிமார்பில் தாக்கிக் கொன்று வீழ்த்தினன். அப்போது சிங்கமுகன் கோபங்கொண்டு தனதுபருவதம் போன்ற தண்டாயுதத்தினால் விரைந்து பூதவீரன் மார்

பில் தாக்கியகாலையில் அவன் சோபமுற்று வீழ்ந்தனன். சிங்கமுகன்
வேறு சாரதியை அமர்த்திக்கொண்டு மேலிடுவதைக் கண்ட சுமாலி
யென்னும் பூதவீரன் ஒரு பெரிய பருவதத்தைப் பிடுங்கிப் பகைவன்
மீதில் வீசிக்கர்ச்சித்தான். அது சமீபித்த காலத்திற் சிங்கமுகன் தன்
கரங்களொன்றினாற் பற்றித்திரும்ப அதனையே இதிவேகமாய் வீசிய
போது அது பேரிடிபோல் சுமாலிமார்பில் வந்துவிழ அவன் நிலத்திற்
சாய்ந்தனன். அது தெரிந்த தண்டியென்பவன் தன் பாரித்த தண்டத்
த்தாற் சிங்கமுகன் மார்பில் வந்து தாக்க அசுரன் அதற்குச் சளையா
மல் அப்பூதவீரனை அப்படியே தன்காலால் ஆகாயத்தில் எற்றி
விட்டனன். அவன் அண்டம்வரையிற் போய்த் திரும்பி வந்து சிங்க
முகன் தோள்களிடத்துக் குறிப்பாய்க் குதித்து மிதித்து உதைத்து
க்கால்கள் ஓய்ந்து பகைவன் புயவலிக்குப் பிரமித்து அவ்வசுரன் கரங்
கள்தோறும் பாய்ந்தும் அவற்றிற் பற்றியிருக்கின்ற ஆயுதவிதங்களி
டத்துலவியும் பருத்த முடிகள்தோறும் சஞ்சரித்தும் செவிகளில்
நுழைந்து நுழைந்து வெளிவந்தும் இவ்விதமாகப் பூதத்தலைவன் வலம்
வருவதனைச் சிங்கமுகன் இன்னதெனத்தெரியாமல் ஈஎன்று நினைந்து
ஒருகரத்தினால் துடைத்துத் தள்ளியகாலத்துக் தண்டியென்பவன்
சரீரம் மிகநொந்தவனாய் வெற்றி வேற்படையின்றி அவன் மாளானெ
ன்று அப்புறம் குதித்துப் பின்னிட்டனன். அதைக்கண்ட பூதப்ப
டைகள் மனங்கலங்கி இரணக்களத்தில் தங்காமல் ஓடி மறைந்தார்
கள்.

இந்தக்காரணங்களைக் கண்டு எண்மலர் இலட்சர் வருந்தினவர்
களாய்த் தமது படைவீரர்களுடன் சூரன் துணைவனை வந்தெதிர்த்
துப் பலகோடிபாணங்களைப் பொழிந்தகாலத்தில் அவைகள் சிங்க
முகன் சரீரமுற்றுந்தாக்கிச் சற்றும் அவனைக் காயப்படுத்தாமல் தங்
கள் கொடுமைகளடங்கி அவனைச்சுற்றிலும் பருவதங்களுக்குச் சமான
மாகக் குவிந்து வருவதைப்பார்த்து அதிசுப் பிரமங்கொண்டவர்
களாய் இதைவிட நம்மாலாகும் போர்த்தொழில் என்னவென்று
இலஜ்ஜையுடன் நிற்கின்றபோது சிங்கமுகன் இடிபோற்கர்ச்சித்து
த்தன் தேரைவிட்டு நிலத்திற் பாய்ந்து பூதவீரர்களைப் பலவாறாகத்
திரட்டி திரட்டி மடிக்கத் தலைப்பட்டான். எண்மரும் படாதபாடு
களை அவனிடம் பட்டு அவனுடன் சண்டை கொடுக்கப்பயந்து பின்
னிட்டனர்.

அவுணராஜன் பழயபடிக்குத் தேரிற்பாய்ந்து எதிர்ப்பாரின்றி விற்கரத்தனாய் மண்டியிட்டிருந்ததைக்கண்ட வீரவாகுதேவர் நினைக்கின்றனர். இச்சிங்கமுகன் செயல்கள் மிக அற்புதமாயிருக்கின்றன! நமது பாதிச்சேனைகளை நொடியிற் கொன்றுவிட்டானே! நமது துணைவர்களும் இவனுக்கு இளைத்தார்களே! எமது இறைவனை நிறுத்தி யான் உத்தகத்திற் செயித்து வருவதாக வந்தேனே! இது சமயம் அபகீர்த்திக்கு இடமில்லாமல் ஒருகைபார்க்க வேணுமென்று தமது தேரைத்துரத்தி வந்து சிங்கமுகன் சதுரங்கசேனைகளையும் முன்பின் பாராமல் அமோகமாய்த் தமது கொடிய சரங்களாற் சின்னபின்னப் படுத்திச் சிருங்கநாதஞ் செய்தனர். அக்காலத்திற் சிங்கமுகன் பிள்ளைகள் நூற்றுவரும் வந்து தங்கள் பாணவருஷங்களைச் சொரியத்தேவர் அவைகளைப் போக்கி அவர்கள் கரவிற்களையும் சேரக்கண்டித்துத் தள்ளினர். அதனைக்கண்ட நூற்றுவரும் இவனை விற்போரில் வெல்லல் முடியாதென்று ஓ! வீரனே! உனக்கு விற்போரொன்று மட்டும் பூர்த்தியாகத் தெரியும் போலிருக்கிறது. எங்களுடன் வாட்போருக்கு வாபார்ப்போமென்றார்கள். வீரன் உடனே தனது வாளாயுதத்தை உருவிக்கொண்டு நிலத்திற் குதித்துச் சூறுவளிபோற் சுழன்று சீறிவரும்போது நூற்றுவரும் தங்கள் தங்கள் வாளாயுதங்களைத் தங்கள் கரங்களிற்கொண்டு சூரியனை நேர்ந்த இருளைப்போல அவரைச் சூழ்ந்து நெருங்கித் தேவர் உறுப்புகளை நாடி நாடி ஓங்கி வெட்டும்போது வயிரமலையிற் பட்ட துரும்புகளைப்போல அவர்கள் வாளாயுதங்கள் தெறித்துப் போவதல்லது சற்றுந்தேவர் தமது திருமேனிக்கு வாட்டமின்றிப் போராடுவதைக் குமாரர்கள் கண்டு பிரமித்தவர்களாய் இதனாலும் இவனை வெற்றிகொள்வது அரிதாகையால் அனைவரும் தீரத்துடன் இவன் மேல்விழுந்து கெட்டியாய்ப் பிடித்துக் கசக்கிக்கொல்வதே காரியமென நிதானித்துச் சடுதியிற் சகலரும் தேவர்மேற் பாய்ந்து தம் கரங்களினால் அவரைச் சேர்த்துக்கட்டினர். அந்த வீரர்களின் சௌரிய பராக்கிரமங்களை என்ன சொல்வோம்! அப்போது தேவர் சீறிப்பொங்கித் திமிறி அக்கட்டினின்றும் வெளிப்பட்டவராய்த் தமது வீரவாளை வீசிவீசிக் கவிந்த அக்குமாரர்களின் சிரம் கரம் உரம் முதலிய அவையவங்களை வெட்டி வெட்டி அவர்கள் யாவரையும் காளிக்குப் பலிகொடுத்தனர். தேவர்கள் கொ

ண்டாடி வீரன் நீயே என்று வீரவாகுதேவர் பேரிற் புஷ்பமாரி பெய்து அவரை வாழ்த்தினார்கள். அதனைக்கண்ணாரக்கண்ட சிங்கமுகன் புத்திரசோபத்தால் வருந்திப்பின் கோபித்தவனாய்த் தேவர் தேரின்முன் வந்து தன் விழிகளில் தீப்பொறிபறக்க இதனைச்சொல்லுகின்றான். உன்னை நிதானிக்குமிடத்தில் ஆதியந்த மற்ற சிவகுமாரனாகக் காணப்படவில்லை. நமது சக்கிரவர்த்தியினுடைய பட்டணத்திற்குவந்து சிலகொடுமைகளைச் செய்து திரும்பிய தூதனோ? உன்னைக்கொல்லுமுன் துரிதமாகச் சொல்லக்கடவை யென்றனன். தேவர் நகைத்து அவுணராஜனே! கேட்பாயாக! நான் காளகண்ட மூர்த்தியின் திருக்குமாரருக்கு அடியானாயிருப்பவன். தூதாக வந்து சூரனுக்குப் புத்திகளைத் தெரிவித்தும் கேளாதபடியினாற் பல்லோருடன் அவன் நகரையும் துகள்கண்டு வெற்றியுடன் மீண்டேன். இப்பவும் உங்களை வேரறக்களையக் காத்திருக்கின்றேன். என்பெயர் வீரவாகு தேவனெனச் சொல்வார்கள் என்றார். சிங்கமுகன் அதனை விஷத்தினுங் கடுமையாகக் கேட்டு ஏதோ உன்சாமர்த்தியத்தைக் காட்டென்று சொல்லி வாய்மூடு முன்னம் தேவர் தம்பாணகோடிகளைவருஷிக்க அவைகள் சிங்கமுகன் மார்பிற் பட்டுப்பிரயோசன மின்றி வீழ்ந்தன. அத்தருவாயிற் சிங்கமுகன் பாரித்த தண்டமொன்றை வீச தேவர் அதைப்பொடியாக்கி மேலும் சரங்களையேவ அவைகள் சிங்கமுகன் சிரங்களிற்பட்டு உபயோகமில்லாமல் மழுங்கி வீழ்ந்தன. அவுணராஜன் சூலப்படையை விடுக்கத் தேவர் கணைகளை விடுத்தும் அது அவைகளைக் கவளீகரஞ்செய்து மேலிட்டு வீரனைச் சமீபிப்பதை இலட்சரும் தேவர்களும் பார்த்து மனங்கலங்கியிருக்கும் போது தேவர் பரமசிவத்தினிடம் பெற்ற வீரவாளால் அதை ஓரே வீச்சில் வெட்டி தள்ளினார். உடனே மேலும் வீரவாகுதேவர் அதிகக்கோபங்கொண்டு இதோ பகைவனைக் கொல்லுவேனென்று பரமசிவன் படையைப் பூசித்து விடலானார்.

அந்தப் பாசுபதமானது வெளிப்பட்டவுடன் அதிக மகிமைகளைக்காட்டி மேலிட்டுவருவதனைக் கண்ட சிங்கமுகனானவன்தனது பாசுபதத்தையும் எடுத்து விட்டனன். அவைகளிரண்டும் விநோதார்த்தமாகப் போர் செய்து பின் விடுத்தவர்களிடம் சும்மா திரும்பி வந்த

டைந்தன். தேவர் ஆச்சரியப்பட்டு இவனுக்கு இணையாக உலகத்தில் ஒருவரையுங் காணேன்! யாவரையும் வெல்லவல்ல சௌரியபரன் இவனே! இவனதுவரமுயற்சிகள் புகழற்பாலதோ! இவன் வெற்றிப்பாடுகளில் எதனைப் பெரிதாகப் புகழ்வேன்! எமது இறைவனது வெற்றிவேலன்றி இவனைக் கொல்வது நம்மாலில்லை. என்றாலும் இவன் ஆணவத்தையும் சேனைகளையும் அதப்படுத்தக் கடவேனென்று கரேக்கணைகளையேவிச்சிங்கமுகனுடைய சாரதிசிரசைக் கண்டித்துத் தள்ளினர். சிங்கமுகன் தண்டாயுத மொன்றைவீச அது வீரன் மார்பில்தாக்கிப் பொடியாய் வீழ்ந்தது. இளையபெருமாள் பாணங்களைச் செலுத்திச் சிங்கமுகன் தேரைநாசப்படுத்தினர். அத்தருணத்திற் பின் வாங்கியிருந்த பூதர் அனைவரும் வந்து கூடிக்கொண்டு அவுணராஜனுடன் பல விதங்களிற் போராடுவ தானார்கள். சிங்கமுகன் வேறு சேமத்தேரிற் பாய்ந்து தன் ஆயிரங்கரங்களிலும் விற்களைக்கொண்டு பாணகோடிகளைப் பிரயோகித்துப் பூதப்படைகளைத் திரள்திரளாய் நிர்மூலம் செய்வதானன். அப்போர்ப் பெருக்கத்தைத் தேவர்கண்டு ஆங்காரித்துத் தாமும் முனைந்து அவுணராஜன் பாணப்பெருக் கனைத்தையும் தம்சரமாரியால் ஒரு நிமிஷத்திற் போக்கடித்தனர். அவ்வெற்றியைக் கண்ட தேவர்கள் கொண்டாடி வாழ்த்தித் தேவர்பேரில் மலர்களைப் பொழிந்தார்கள். சிங்கமுகன் தனது பாணங்கள் நிர்மூலமானதைக் கண்டு அடாபயலே! என் வீரத்தன்மைகள் உனக்குத் தெரியாது. ஆயிரங்கரங்களுடைய நம்மோடு அபலனாகிய இரண்டு கரங்களுடைய நீயோ எதிர்த்து நிர்வகிக்கப் போகின்றாய். இதோ உன்னைக்கொன்று புத்திர சோபந்தணிவேன். ஓடிப்போனாலும் விடேன் என்றவளவில் தேவர் ஓ! அவுணராஜனே! வீண் வார்த்தைகளிற் பிரயோசனமில்லை உன்சேனைகளையும் உன்னையும் தீரமாக உலப்பப்போகின்ற என்வில் திறத்தைப் பார்ப்பாயாக வென்றனர். சிங்கமுகன் அதைக்கேட்டவுடன் ஏககாலத்தில் ஆயிரந்தனுசுகளை வளைத்து அற்புதமான விதமாய்ச் சரங்களை அபரிமிதமாகச் சொரிந்தான். தேவர் அவைகள் அனைத்தையும் நிமைப்போதினிற் போக்கி வெளிசெய்தனர். சிங்கமுகன் கோபித்துத் தேவர் வில்லைக்கண்டித்து மேலும் சரங்களால் அவர் மார்பையுந் துளைத்து விட்டனன். தேவர் சளையாமல் அவுணராஜன் தேரைப்பொடியாக்கினர். உடனே சிங்கமுகன் வேறுதேரேறிச் சரங்

களைத் தொடுக்குமுன் வீரன் துரிதமாய் அவன் கரங்களில் விளங்கும் ஆயிரந்தனுசுகளையும் கண்டித்துத் தள்ளிவிட்டனர். இத்தகையபெருஞ் செயத்தைக்கண்ட விஷ்ணுவாதி தேவர்களும் வீரன் வில்திரத்தை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள். அவுணராஜன் வெறுங்கரங்களாய் விளங்குவதைக் கண்ட பூதர்கள் கரங்களைக்கொட்டி நகைத்தார்கள். அப்போது இராஜராஜனானவன் பல்விழந்த நாகப்போல் மானம் மனதை வருத்திக்கொல்லயாதுந் தோன்றாமற் பசபசென்று விழித்துக்கொண்டிருந்து அப்பால் தன்னைப்பெற்ற மாயைஎன்பவள் கடாக்ஷித்திருந்த கொடியபாசத்தை யெடுத்துப் பகைவரனை வரையும் ஒருமிக்கக் கட்டிக்கொன்று வாரிக்கொண்டு போய்ச்சாகரங்களுக்கும் அப்புறத்தில் நிற்கின்ற உதயகிரியிற் சேர்த்துக் காவல்செய்திருக்கக் கடவாயென்று வீசியெறிந்தான். அதுபல உற்பாதங்களுடன் வெளிக்கிளம்பி விஷங்களைக்கக்கி இருண்டுவருவதனைத்தேவர்கண்டு பலஅஸ்திரங்களைவிட்டும் அவைகள் யாவையும் அது கவளீகரம்செய்து கொண்டு அதிவேகமாகவந்து சிவசுப்பிரமணிய தேவரின் சேனைகளையும் இலட்சர் எண்மர் வீரவாகுதேவரையும் நிமைப்போதில் மயக்கிப் பிரேதங்களாக்கித் திரட்டிக்கொண்டு மேலெழுந்து வானவழியாய் வேகத்தினுங் கடிகிச் சாகரங்களைக்கடந்து விஷ்ணு பள்ளிகொண்டிருக்கும் க்ஷீராப்தியின் மத்தியில் மேருவையொத்து விளங்கும் உதயகிரியிற் சேர்த்து அங்குகாவல்கொண்டிருந்தது.

சிங்கமுகன் களத்தில் ஒருவரையுங்காணாமற் போனதைக் கண்டு மனதில் அடங்காத ஸந்தோஷத்தினால் தன்தேகங் குலுங்கக் குலுங்க நகைத்துச்சமர்க்களம் முற்றிலுஞ் சுற்றியாவரையுங்காணாமையாற் பால சுப்பிரமணியன் நமது ஜெயத்தைத்தெரிந்து மறைந்து ஓடிவிட்டனனென்று தன் வல்லபத்தைமெச்சிப் பேசியிருக்கும்போது சில அவுணத்தூதர் ஓடி வந்து சுவாமீ! ஆயிரம் வெள்ளம் பூதப்படைகளும் அதற்கடுத்த சேனைத்தலைவரும் பிரமன் விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள் சூழ்ந்து போற்றப்பாசறையில் வெற்றிவேலாயுதன் இருக்கின்றான். இதனைக்கண்டு வந்தனமென்றார்கள். அதனைக் கேட்டவுடன் அவுணராஜன் தனது கோரத்தந்தங்கள் விளங்கச் சிரித்துப்பாசறையிற் பதுங்கி யாயிருக்கின்றான். இதோ நானே அவ்விடம் போய்ப்

பாலனுடன் சகலரையுங் கொன்று இன்றுடன் போரைமுடித்து விடுகிறேனென்று மேரு கால்முளைத்த சைவது போலத்தேவர்கள் பயந்தோட நடந்து போவதாயினான். அக்காலத்தில் வாயுதேவன் மனவருத்தத்துடன் வேகமாய்வந்து வேற்றிவேற்கடவுளினது பாத கமலங்களிற் பணிந்து விரவாகுதேவர் முதலானவர்களுக்கு நேர்ந்த ஆபத்தைத்தெரிவித்த மாத்திரத்திற் குமாரக்கடவுள் நல்லது சிங்கமுகன் எவ்விடத்திலிருக்கின்றா னென்று கேட்க அவன் இதோ சமீபித்துச் சயினியங்களுடன் வருகின்றா னெனக் கேட்டவுடன் சண்முகதேவர் சீக்கிரம் வாயுதேவனாற் கொண்டுவந்து நிறுத்தப்பட்டதேரில் தேவர்கள் புஷ்பமாரி தூர்த்துப் போற்றி வாழ்த்த வீற்றிருந்து சதுரங்கசேனைகளுந் தம்மைச்சூழ்ந்துவர யுத்தத்தைக்குறித்துப் புறப்படலாயினர். இவ்விதம் இரணக்களத்தை நோக்கிவருகின்றதனைச் சிங்கமுகன் கண்டு தன்சேனைகளுடன் எதிர்ப்பட்டான். அப்போது அவுணப்படைகள் கோபமீறிப் பூதப்படைகளுடன் எதிர்த்துப் பற்பலவிதங்களாக வெற்றிப் போராடியசமயத்திற் சிங்கமுகன் கோபாக்கினி மேலிட்டு மாயமந்திர மொன்றை யுச்சரித்துப் பூமி வானம் திசைகள் நிறையத்தக்க கோபரூபத்தைத் தாங்கி ஆர்ப்பரித்துத்தன் இரண்டாயிரங் கரங்களையும் விரித்து சத்த சாகரங்களைப் போல் விளங்கிக்கொண்டிருக்கும் பூதப்படைகளைச் சேர்த்து வாரிவாரிப் பிலத்தைப்போன்ற தன்வாயினிடத்துப் போட்டுப் பெருங்குவைகளாய் விழுங்கத்தலைப்பட்டான். இவ்விதங்களாக ஆயிரம் வெள்ளம் பூதப்படைகளையும் சிங்கமுகன் தன் வயிற்றில் அடைத்த காரணங்களை அனந்தம் வாய்களைப் பெற்றுப்பல காலம் சொன்ன போதிலும் முடிவதன்று.

இவைநிற்கச் சிலதூதர்கள் மயேந்திரபுரியிற் போய்ச் சூரனைத் தெரிசித்து வணங்கிச் சிங்கமுகன் வெற்றிகளைச் சொன்னமாத்திரத்தில் அவன் பேரானந்தமடைந்து தான் போட்டிருந்த ஆபரணங்களெல்லாமல் நகைப்பெட்டிகளையுந் தருவித்து அத்தூதுவருக்குச் சன்மானமாகக் கொடுத்துப் பின் தன் தம்பி சிங்கமுகனுக்குப் படைகளையும் கூட்டி அனுப்பினான், சூரன் அடங்காத ஸந்தோஷமாகத்தன் துணைவன் வேலாயுதமூர்த்தியுடன் எதிர்த்துச் செய்யும் போரின் திறங்களையும் கண்டு களிக்கும்படிக்கு விருப்புற்றவனாய்ச் சகலஆடம்பர

ங்களுடன் மேருகிரியைப் போன்ற கோபுரத்திலேறித்தன் தம்பியின் பராக்கிரமங்களைக் கொண்டாடிப் பார்த்துக்கொண்டிருந்தான். அக் காலத்தில் இரணக்களத்திற் போர்த்தொழிலைச் செய்யுந் திருவிளே யாடலைக் கொண்ட சண்முக மூர்த்தியானவர் பகைவன் முன் தேரை ச்செலுத்தி வந்தபோது சிங்கமுகன் நால்வகைச் சேனைகளும் கோபி த்தெழுந்து சமுத்திரத்தைப்போல் தேவாஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து மேலிட்டுத் தம் மேல்வருவதைக் கண்ட லோகநாயகன் திரு நகைசெய்து தனது ஒப்பற்ற வில்லை நாணேறிடடுக் குணத்தொனி யெழுப்பினர். அந்த ஓசை இராட்சத சேனைகளின் செவிகளில் நுழை ந்த மாத்திரத்தில் அவைகள் நிலைகலங்கித் திகிற்பட்டுத் தங்கள் ஆயு தங்களை நழுவவிட்டுக் குப்புறவிழுந்தன. ஜெபசாலியாகிய சிங்க முகன் பயந்து சிரக்கம்பஞ்செய்து இவ்வித ஒலியை எழுப்பத்தகுந்த வன் சிவகுமாரனே ஆகவேண்டுமென்று பிரமித்து இச்சிறுவனை நாமே அடக்க வேண்டுமெனத் தீர்மானித்துத் தன் தேரைமுடுக்கிக்கொண் டுவந்து வேலாயுதக் கடவுள் முன் நிறுத்தி எமது ஐயனை உருத்துப் பார்த்து இதனைச் சொல்லுவான். திருநேத்திரதாரியாகிய பரமசிவம் அருளியபிள்ளாய்! நான் சொல்வதை ஞாபகமாய்க் கேட்கக்கடவாய்! பூர்வீகமாய் அவுணகுலத் தாயாதிகளான தேவர்களுடைய அக்கிர மங்கள் ஒடுங்க நாங்கள் தண்டித்து அவர்களைச்சிறையில் வைத்தனம். நாங்கள் எப்படிக்கும் வழக்கிட்டு ஒருகாலத்தில் ஒருமித்துப்போய் விடுவோம். இக்காரணங்களைச் சற்றும் யோசியாமல் யாதொரு சம்ப ந்தமுமில்லாத நீ எங்களுடன் எதிர்த்துச் சண்டைக்கு வரவேண்டிய நிமித்தமென்ன வென்று வினவியவாக்கியங்களைப்பிரணவவடிவாக விள ங்கும் பாலசுப்பிரமணிய தேவர் திருச்செவியிலேற்று, அழகுறச் சிரி த்து அவுணர் பெருமானே! நீபேசியது வெகுநேர்த்தி இப்பிரபஞ் சத்திலுள்ள தீனர்களை வலிமையினால் துன்பம் செய்து அலைக்கும் கொடிய பாதகரைத் தண்டித்து அடக்கி மன்னுயிரைப் பாதுகாத்து வரும் இறைமையைச் செலுத்திவருவது எமதுசெயல். நல்ல ஒழுக்க ங்களையுடைய தேவர்களை இரக்கமில்லாமற் பெண்டு பிள்ளைகளுடன் பலதகாத துன்பங்களுக்கேதுசெய்தலைத்துக்காவற்படுத்தினமையைக் குறித்து நாம் தூது அனுப்பியிருந்தும் நேரிற் சொல்லியும் அவைகளை ஒருபொருட் படுத்தாமலிருந்த படியால் நாம் உங்களோடு சண்டை

செய்து அவர்களை விடுவித்து அவர்களுக்குப் பழயபொன்னுலக வாழ்வைக் கொடுக்க வந்தனமென்றார். சிங்கமுகன் அதனைக்கேட்டுத் தன் கரங்களைத் தட்டிச்சிரித்து ஓ! பாலனே! நீஎங்களை வென்றனை, தேவர்கள் சிறையினையும் மீட்டனை. உன் எண்ணமும் சூரத்துவமும் வெகு நேர்த்தி. பரமசிவத்தினால் இதுவரை முடியாத இக்காரியத்தைப் பாலனாகிய நீயோ நிறைவேற்றப் போகின்றாய். சிறுபிள்ளை ஆகையால் தேவர்களுடைய முகஸ்துதியில் மயங்கிவந்தனை. என்னுடன் எதிர்த்து ஜெயித்தவர்கள் கிடையாது. தெரியாமற் பெரிய காரியத்தில் தலையிட்டுவந்தனை. நீஉன் பெற்றோர்களிடத்திற் போய்ச் சேர்ந்து அருமையாய் வாழ்ந்திருக்கக் கடவாய் என்றவளவில் சரவணபவன் இவன் உறுதி வெகுநேர்த்தி எனநகைத்து அவுணராஜனே! நமது குழந்தைப் பருவத்தின் திறங்களைச் சற்று பார்ப்பாயென ஒருவயிரவாளியைப் பூட்டிப் பிரயோகித்தனர். அப்பாணமானது தேவர்கள் கொண்டாட ஓடிவந்து பாதகன் மார்பில் தடாரித்துப் பெருவாயிலைப் போலத் திறந்து உதிரம் பெருக்கெடுக்க உருவிப்போன காலையிற் சிங்கமுகன் மிகவும் வருந்தித் திகைத்திருந்தனன். இவ்விதமாக மார்பு பிளந்த மூலமாய்ப் பாதகன் கருப்பத்திற் சஞ்சரித்திருந்த பூதப்படைகள் அனைத்தும் புற்றினிடத்தெழும் ஈசல்களைப்போலப் பலபலென வெளி வந்து கடலும் அஞ்ச ஆர்த்து இரணக்களவெல்லை முற்றும் பரவிவருவதைச் சிங்கமுகன் கண்டு மனம் வருந்தி நாகம்போற் சீறித்தனது கரங்களினால் அந்தத் துவாரத்தை மூடித் தண்டாயுதமொன்றைக் கந்தசுவாமி பேரில் வீசினான். அதனை எமது கர்த்தன் கண்டு நான்கு சீலிமுகங்களைப் பிரயோகித்து அதைப் பொடி செய்து சிங்கமுகன்நெற்றிகளையும் துளைத்துஊடுருவிப்போகச்செய்தகாலையிற் பாதகன் இரத்தம் பெருக்கெடுத் தோடவாடிப் பிரமித்திருந்து விட்டனன். அக்காலத்தில் மார்பைமூடிய அவன் கரங்களானவைசோர்ந்து தாழ்ந்தன. பூதவீரர் அனைவரும் பின் அம்மார்க்கமாக வெளி வந்து சுப்பிரமணிய தேவரைச் சூழ்ந்து கொண்டானடித்துப் பெருகிவிளங்கினர். சிங்கமுகனால் முன் பலபல விதங்களிற் பட்டுக்கிடந்த பூதர்கள் அனைவரும் சண்முகப் பெருமாள் கடாக்ஷமகிமையினால் உயிர் பெற்றும் மூர்ச்சை தெளிந்தும் எழுந்தோடி வந்து தம் இனத்தைச் சேர்ந்து களித்திருக்கும் போது பாலசுப்பிரமணிய தேவர் உதயகிரியினிடத்

திருக்கின்ற வர்களையும் தருவிப்பதாகத் திருவுள்ளத்திற் கொண்டு ஒரு சரத்தைச் செலுத்திய காலத்தில் அதுமனோவேகத்திலும் மேற்பட்டு உதயகிரியைச் சேர்ந்து பந்தித்திருந்த பாசப்பிணிப்பைத் துகள்பட வாட்டும்போது வீரவாகுதேவர் முதலானவர்கள் நித்திரை தெளிந்த வர்களைப்போல் எழுந்து திருக்குமாரனைச் சிந்தித்துப் போற்றி அண் டங்கள் அதிர ஆர்ப்பரித்து உடனே வானவழிக்கிளம்பிச் சண்முகப் பெருமாள் சன்னிதானத்தில் இறங்கித் தேவதேவனைத் தம் கண்களா ரக் கண்டு அவர் திருவடிகளிற் பணிந்து அப்பகவானுடைய பூரண கடாக்ஷத்தைப் பெற்றுப் பூரித்துச் சிறந்திருந்தனர். தேவர்கள் அனை வரும் கர்த்தன் தம்மை நம்பியவர்களிடத்திற் காட்டிய கருணையை க்குறித்துப் புகழ்ந்தார்கள். அத்தருணத்தில் முன்னம் குமாரதேவர் காட்டிய நாஞ்ஞெலியால் மரணமூர்ச்சை யடைந்திருந்த இராக்ஷதப் பாதகரனைவரும் ஆர்ப்பரித் தெழுந்தவராய் ஆதிதேவனுடைய திரு க்குமாரனை வளைந்து கொண்டு கொடிய போராட்டங்கள் செய்வதனை க்குமாரதேவர் கண்டு நகைத்துத் தமது கணக்கிறந்த பாணங்களைச் செலுத்திச் சிங்கமுகனுக்கு உதவியாக வந்த சேனைகளை அதஞ் செய் தனர். லோகநாயகன் படைகளின் மகத்துவங்களை யாவர் என்னெ ன்று புகழ்ந்துரைக்கக் கூடும்! அப்போது சமரபூமிவிளங்கிய அலங் கோலத்தை யென்ன சொல்வோம்! இவ்விதமாய்த் தன் சேனைகளனை த்தும் ஒரு நொடியில் அடைந்த பெரும் நாசத்தைச் சிங்கமுகன் சோபம் நீங்கியெழுந்து பார்த்துப் பாலன் சேவகம் வெகு நேர்த்தி யென்று மானமும் கோபமும் மனதைவாட்ட உக்கிரங்கொண்டு குமா ரதேவர் பேரிலும் பூதவெள்ளங்களைக் குறித்தும் பத்து நூறாயிரம் சரங்களைப் பூட்டி விட்டான். அதனை எமது கர்த்தன் கண்டு தமது ஆயிரக் திவ்யசரங்களால் அவைகளைப் போக்கிப் பின்னும் பாதகனு டன் போராடி வருகின்றபோது சிங்கமுகனனவன் குமார தேவரின் தேரை நடாத்தும் வாயுதேவன் மார்பைப்பிளந்து கர்ச்சித்தனன். அதனை எமது கர்த்தன் கண்டு நூறுபகழிகளாற்சிங்கன் தேரின் வெற் றிக்கொடியை வெட்டித்தள்ளி அவன் பாகனையும் தேரையும் தும்சப் படுத்தினர். சிங்கமுகன் என்ன செய்வான்? தன்வாகனத்தைப்போக்கி க்கலை இழந்த சந்திரனைப் போலமதிப்பிலடங்காத பெருமிதங்களெல் லாம் குறைந்து திலத்தில் நின்று எண்ணாததெல்லாம் எண்ணிப் பின்

பாணவிதங்களை ஒன்றனந்தமாக மேலும் பிரயோகிப்பதாயினன். சுயஞ்சோதிவடிவுடைய குமாரதேவர் அதைப்பார்த்துப் பாதகன் பாணங்களைப்போக்கி அவன் கரங்களிற் பற்றியதனுசுக்களை யெல்லாங் கண்டித்துத் தள்ளிவிட்டனர். சிங்கமுகன் பின்னிடையாமல் வரப்பிரசாதத்திற் பெற்ற மூத்தலைச் சூலமொன்றைச் சிவகுமாரன் மார்பிற்கு இலக்காக ஓங்கிவீசினன். அதனை எமதிறைவன் கண்டித்து மேலும் ஆயிரம் நாராசங்களைச் சூரன் துணைவன் பேரிற் பிரயோகித்தனர். பாதகன் மந்தரத்தை ஒத்ததண்டாயுதத்தைச் சுழற்றி அப்பாணங்களை விலக்கி மேலிட்டு ஆர்ப்பரித்து வருவதை எமதிறைவன் கண்டு துரிதமாய் அப்பாதகன் தண்டம் பற்றியிருந்த கரத்தினைக்கண்டித்துத் தள்ளினர். சிங்கமுகன் ஆதியிற் சிவபிரானிடம் பெற்ற வரமுயற்சியினால் மீண்டும் கரமானது முளைக்க உடனே அந்தக்கரத்தினால் விழுந்த தண்டத்தைச் சீக்கிரமாக வெடுத்துச் சுழற்றிச் சிவகுமாரன்மேல் வீசினான். அதனைக்குமாரசுவாமி பொடியாக்கினபோது சிங்கமுகன் வருந்திக் காலபாசத்தை யெடுத்து இதனால் நீ மாளக்கடவாயென விடுத்தனன். வேற்கடவுள் அதைநீறாக்கிவிட்டனர். சிங்கமுகன் இப்பாலனை இனி என் கரங்களாற் பற்றிப்பிசைந்து கொல்வேனெனத் தன் இரண்டாயிரங் கரங்களையும் திசைகள் முட்டப்பரப்பிக்கொண்டு பாய்ந்துவருவதை எமதையன் தெரிந்து அவன் கரங்களனைத்தையும் கண்டித்துத் தள்ளினர். பாதகன் தவமகிமையினால் உடனே கரங்கள் திரும்பமுளைக்க அவன் முன்னம் கண்டித்துக்கீழேகிடக்கும் தனதுகரங்களையெடுத்துக் கிறுகிறெனச் சிவகுமாரன் மீதில் வீசிவீசி வேகமாய்வரும்போது லோகநாயகனும் துரிதமாய்ப் பாதகனுடைய ஆயிரஞ் சிரங்களையும் பின்னும் அவன் இரண்டாயிரங் கரங்களையும் கண்டித்துத்தள்ளினர். இவ்விதம் முண்டமான சிங்கமுகனுக்குத் திரும்பவும் வரமுயற்சியினால் அவயவங்கள் அனைத்தும் கிளைத்துக்கொண்டன. இக்காரணங்களைத் தேவதேவோத்தமனான சரவணபவன் கண்டு பூர்வத்தில் இவன் யாகத்தில் தன் சிரங்களை அவிகொடுத்த காரணத்தினால் நீங்கிய உறுப்புகள் மீளத்தோற்றுகின்றதென நிதானித்து அதற்கடுத்த காரியத்தை யோசிப்பதாயினர். அப்போது சிங்கமுகன் குழந்தை வடிவேலரைப் பார்த்து ஓ! பாலனே! நீ இவ்விதங்களில் அளவற்ற காலம் போராடினும் சூரனுயிருக்கப்பட்ட என்னை ஜெயிப்பது ஒருக்காலும் முடி

யாது அறியாமல் வந்து இப்போது என்னிடம் அகப்பட்டுக் கொண்டாய் உன்பிராணனுக்கும் வந்து விட்டது. தேவர்கள் சிறையைவிடுவிப்பது உன்னால் ஒருபோதும் முடியாது. இந்நிமிஷம் உன்னைக்கசக்கிவாயிற் போட்டுக்கொள்வோ மென்றாலும் உன் பிதாவானவர் நம்மிடத்தில் கிருபைவைத்திருப்பவரா யிருக்கின்றார். ஆதலால் சீக்கிரம் உன்பிராணனைத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விடென்றான். விவேகசூனியனாகிய சிங்கமுகன் வாசகங்களை எமதிறைவன் கேட்டுக்குறுநகைசெய்து அவுணராஜனே! உனக்குக்காலன் பின்னாற் காத்திருப்பதை அறியாமற் பிதற்றுகின்றாய்! விவேகமற்றவனே! இதோஉன் உயிரைவாங்குவதைப் பாரென்று குமரகுருபரன்பேசி முடிந்தவுடன் சிங்கமுகனுக்கு அதிககோபம் பிறந்து இரண்டாயிரம் பருவதங்களைப் பஞ்சுபோலெடுத்து எமதிறைவன் மேல்வீசினன். இறைவன் அவைகளைக்கணத்திற் பொடியாக்கி மேலும் கணைகளால் அவன் வயிரமார்பைப் பிளந்தனர். அந்தக்காயத்தைச் சட்டைபண்ணாமற் பாய்ந்து கணக்கிறந்த பருவதங்களைப் பறிக்கத் தொடங்கினன். குமாரசுவாமியார் துரிதமாய் அவன் ஆயிரஞ்சிரங்களையும் கொய்து தள்ளினர். உடனே தலைகள் அவனுக்கு முளைத்து ஒட்டிக்கொள்ள அவன் பருவதங்கள் அனைத்தையும் எடுத்து எமது கர்த்தன்மீது வீசிப்புயாசலங்களைத் தட்டினன். கடவுள் அப்பருவதங்களைத் தூளாக்கி அவன் தோள்களையும் அறுத்தித் தள்ளினர். அவைகள் நிலத்தில் விழுமுன்னம் பழயபடிக்கு மீளவேறு கரங்கள் அவனுக்கு முளைத்துக்கொண்டன. "தவங்களிலும் சிறத்தபொருள் உலகத்தில் ஒன்றுமிராது. ஆகையினலே யாவரும் அப்பேற்றினையே பெற விரும்பவேண்டுமல்லவா?" இக்காட்சியைக்கண்ட திருக்குமாரர் ஒருதிருவிளையாடலைச் செய்யத்திருவுள்ளங்கொண்டு ஓயாமற் சிங்கமுகன் சிரங்களையும் கரங்களையும் தாள்களையும் அளவற்ற தரம் கொய்து கொய்து நிலத்தில் தள்ளிப்பின் அவைகள் திரும்பமுளைக்கும் வேடிக்கைகளைப் பார்த்துப் பார்த்துக் களிப்பதாயினர். பின் மற்றொரு திருவிளையாடலைக் கருதி ஒருசிரம் இரண்டு கரங்கள் நீங்கலாய் மற்றவைகள் அனைத்தையும் கண்டித்துத் தள்ளிப்பார்த்துப் பார்த்துக்களித்து இவ்விதமாகச் சிலபோது விநோதப்போரைச்செய்து கடைசியில் எமதையன் சற்றுகோபித்து உம்மென்று உக்கிரமாய் அதட்டினர். அவ்வதிர்ச்சிக்கு அஞ்சிமுளைத்து வந்த அவயவங்கள் "ஆமையானது மனி

தர் அரவங்கண்ட மாத்திரத்தில் தனது உறுப்புகளை உள்ளடக்கிக் கொள்வதுபோற்" பழயபடிக்குத் தோற்றாமல் ஒருசிரமும் இரண்டு கரங்களுடனும் சிங்கமுகனிருந்தான். இவ்விதம் பாலசுப்பிரமணியர் ஊங்காரிப்புக்குத் தன் அவயவங்கள் அடங்கிப் போனமையைக்கண்டு அவுணராஜன் திடுக்கிட்டு யாதும் தோன்றாமற் பிரமித்து நின்றனன். அவுணன் சோர்வைக் கிருபாநிதியாகிய எமது சண்முகப்பெருமாள் கண்டவுடன் மனம் இரக்கமுற்று ஐயோ! இந்தச்சமயத்திலாவது இவன் மனந்திரும்பமாட்டானா வென்று பல நியாயங்களைப் பிரத்தியட்சமாக நிரூபித்துக்காட்டியும் பாதகன் அவைகளை அலட்சியஞ் செய்து மேலுங் கோபித்து ஓ! பாலனே! இன்னும் எனது வீரபராக்கிரமங்களைப் பார்ப்பாயென்று மிகப்பருத்த பருவதமொன்றைச் சுவாமியின்பேரில் துரிதமாய் வீசினன். குமரகுருபரன் அதனைக்கண்டித்துச்சும்மாயிருந்தனர். சிங்கமுகனுக்கு அதிக கோபம்பிறந்து ஓ! சிறுபிள்ளாய்! உனக்கு விற்போரே செய்திருக்கத் தெரியுமென்று இகழ்ந்து பாரித்ததண்டாயுதமொன்றை யெடுத்து மூலகாரணராகிய வேலாயுதர் மீது சுழற்றி வீசினன். அவன் மதியாமற் பேசியதைக் கேட்ட சரவணபவனுக்குச் சற்றுகோபமுண்டாகித் தமது கரத்திற் கோடிசூரியப் பிரகாசமாய் விளங்கியிருக்கும் வெற்றிவேலாயுதத்தை வஞ்சகன் உயிரை உண்டுவருவாயெனச் செலுத்தியபோது அது வெளிப்பட்டுச் சிறிப்பாய்ந்து மேலிட்டு வந்திருந்த தண்டாயுதத்தைச் சாம்பராக்கிப் பிரளயகாலத்து இடிவிழுவது போலாகச் சிங்கமுகன் வலிய மார்பில் தாக்கித்தடாரித்து உருவி அவன் பிராணனைக் கிரகித்துக்கொண்டு உதிரமானது பீறிட்டோட முதுகின் மூலமாக வெளிப்பட்டுப் போனது. உடனே அவுணராஜன் ஓ! வென்னும் இரைச்சலைக்காட்டிக் கதறிச்சண்ட மாருதத்திற் பட்டு வேரற்று விழும் வடவால விருட்சத்தைப் போல நிலம்பிளக்கத் திடீரென்று விழுந்து பதைத்து மாண்டனன். வெற்றி வேலானது உடனே ஆகாய கங்கையிலும் தேவர்கள் புட்பமாரியிலும் மூழ்கிக் குமாரக்கடவுள் திருக்கரத்தில் வந்தமர்ந்து விளங்கியது. விஷ்ணுவாதி தேவர்கள் சண்முகபகவன் பெருமைகளைக் கொண்டாடிப் போற்றி மகிழ்ந்த திறங்களை என்னவிதமென்று சொல்லுவோம்! அப்பாற் குமாரதேவர் சகலரும் தம்மை ஜெயவுற்சாகங்களுடன் புடைசூழத்தமது பாசறைக்கு விஜயஞ்செய்து சிவபிரானைப் போற் சிங்காதனத்தில் யாவரும் போற்

றவிற்றிருந்தனர். இவை நிற்கக் கோபுரத்தின்மேல் நிலையில் வீற்றிருந்து தன் துணைவன் செய்கின்ற போர்த்தொழிலைக் கண்டிருந்தவன் திடுக்கிட்டு வெகுநேரம் போராடியிருந்த காரணத்தால் தன் துணைவன் களைத்து விழ்ந்தானோ அல்லது மாண்டானோ யாதுந்தோற்ற வில்லையே என்று திகைத்து விழிகளை மூடாமற் பார்த்திருக்கும் போது சில அவுணதூதுவரால் சிங்கமுகன் போராடிக் கொல்லப்பட்டவிருந்தாந்தங்களைக் கேட்டுத் துயரவெப்பமானது தேகத்தைக் கொளுத்தக்களைத்து விழ்ந்து கடகடெனப் புறண்டு ஓ! வெனக்கதறி என்னுயிர்த் துணைவனாகிய சிங்கமுகனே! பயமும் வீரமும் வலியும் மானமும் பிராணன் முதலிய சகலவளங்களும் போக்கினவனாய்ப் பிரேதத்தினும் கடைப்பட்டுத்திகைக்கின்றேனே! உன்திருமுக மண்டலங்களை என் முன் வந்து சற்றுகாட்டாயோ! என்று பலவாறாகப் புலம்பிப் பிரலாபித்த காலத்தில் இராஜாதிராஜனைத் தேற்ற ஒருவரும்இல்லாமல் வெகுநேரம் வாடிவருந்தி அவன் தானே ஒருவகையாகச் சோபத்தை மாற்றிக்கொண்டு சிங்காசனத்திலிருந்து என் துணைவனைக்கொன்ற சிவகுமாரனை நானே நேரிற் போய்க் கொன்று பழிவாங்குவேனென்று பிரதிக்கினைசெய்து சீறியிருந்தனன்.

,, சூரபதுமன் வதம் ,,

இவ்விதமாகச் சூரன் கோபங்கொண்டு தனது ஆயிரத்தெட்டு அண்டங்கள் தோறும் வாசமாயிருக்கும் நால்வகைச் சேனைகளையும் தூதுவர்களால் அழைப்பித்த காலையில் அவைகளெல்லாம் ஓரே சமயத்திற் கணக்கிறந்த வெள்ளங்களாய்த் திரண்டு அண்டப்பித்திகை நெக்குவிட்டு உதிர ஆர்ப்பரித்துப் பிரளயப் பெருக்கினும் மேலிட்டு வந்து கூடுகின்றதைத் தேவர்கள் கண்டு திகைத்துவாடினர். சூரன் பெற்றிருக்கின்ற சேனைகளின் பெருக்கை நிதானிக்கவுங் கூடுமோ! இவ்வித மகிமைகளையுடைய அந்தச் சேனைகள் வருவதற்கு இடம் பெறாமல் வானவெல்லை முற்றும் அடர்ந்து நிற்கின்றதனைச் சூரன் கண்டுகளித்து உடனே ஆயுதசாலையிற் சென்று போர்க் கோலங்கொண்டு ஆயிரக்கோடி சேமத்தேர்களையும் பரமசிவன் படைத்துக்கொடுத்த இந்திரஞாலத் தேரையும் சிங்கவாகனத்தையும் முந்திக்கொண்டு போகப்பணித்துத் தனது தேரைக்கொண்டுவரக் கட்டளையிட்டனன்.

இப்படி அவனுக்காக கொண்டு வரும்படிக்குக் கட்டளையிட்ட தேரானது ஆதியில் இந்தச் சூரன் யாகத்தில் விழுந்திறந்து பரமசிவ கடாக்ஷத்தினால் எழுந்த காலத்தில் அவனுடன் வெளி வந்த மகிமையையும் இந்திரஞாலத் தேருக்கு ஒப்பான பெருமைகளையும் உடைத்தானதென்று அறிவீர்களாக. இவ்வித இரதத்தைத் துரத்தி வந்து சூரன் முன் நிறுத்திய காலையில் அசுரேந்திரன் அதில் ஆரோகணித்துக் கோபுரவாயிலைத் தாண்டி வெளிவந்ததனைக் கண்ட பெருஞ்சேனைகள் அஷ்டதிக்குகளும் செவிடுபட்டுச்சோர ஜெயம் ஜெயம் என்று ஆர்ப்பரித்து வந்து அவனைச் சூழ்ந்து கொண்டு பூமிதேவி சுமை தாங்க மாட்டாமல் தத்தளிக்க இரணக்களத்தை நோக்கிப் போகின்ற காலையில் தூசிப்படையானது குமாரதேவர் வாசமாயிருக்கின்ற பாசறைவிடுதியைக் கீழ்மேலெங்கனும் வளைந்து கொண்டதனை அங்குள்ள சிவகணங்கள் கண்டு தங்கள் ஆற்றல் அடங்கிப் பதை பதைத்துச் சிங்கமுகனால் முதல் நாள் பட்ட வருத்தங்களை நினைந்து நினைந்து வருந்திய விதங்களை என்னென்று சொல்வோம்? மகாவிஷ்ணு முதலானவர்கள் இதனைத் தெரிந்து வருந்தினவர்களாய்க் கர்த்தன் பாதாரவிந்தங்களை வந்து பணிந்து அய்யனே! தேவரீர் சிங்கமுகனை வாட்டிய சேதிகேட்டுச்சூரன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலிருந்த சதுரங்கசேனைப்பெருக்குகளையும் தருவித்துக் கொண்டு அதிவீரா வேசத்துடன்வருகின்றனன். அதற்கு முன் தூசிப்படை நமது பாசறையைச் சூழ்ந்து முடிவிட்டதென விண்ணப்பஞ் செய்து பிரார்த்திக்கப் பன்னிரு புயாசலங்களைப் பெற்ற எமதிறைவனானவர் புன்னகைசெய்து தெய்வீகம் பொருந்திய தமதுதேரைக் கொண்டுவர வாயுதேவனுக்குக் கட்டளையிட்டு அதிற்பகவான் சருவாயுத பாணியாக ஆரோகணித்து விளங்கினர். அதைக்கண்டதேவர்கள் கற்பகமலர்களைவாரிக் குமாரசுவாமியின் பேரிம் சொரிந்து வாழ்த்தினர். பராக்கிரமசாலியாகிய வீரவாகுதேவரும் மற்றத் துணைவர்களும் படைத்தலைவர்களும் சருவாயுதபாணிகளாய் இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளுடன் நம்கடவுளை வந்து சூழ்ந்து இரணக்களம் நோக்கிப் பிரயாணித்துப் போவதாயினர். இவ்வாறு வரவர அவுணப்படைகள் கிட்டிய சமயத்திற் கூட வந்து கொண்டிருக்கும் இந்திரன் முதலான தேவர்கள் அகிலமுழுதும் அடர்ந்து பெருகிவரும் அவுணச்சேனைகளைக்கண்கூசக் கண்டு நடு நடுங்கித் திருத்துழாயணிந்த மகாவிஷ்ணுவை இந்திரன் வணங்கி எமதிறைவ

ளுகிய முருகப்பிரான் மிகவலிபெற்று வீறிவரும் சத்துருப் பாதகப் பெருக்கை வெல்வதற்குப் பலயுகங்கள் செல்லும்போற் காணுகின்றது? சூரனை வெற்றி கொள்ளும் காலம் எப்போது சம்பவிக்கும்? நாங்கள் பொன்னுலகவாழ்வை அடைந்து முகமலர்ச்சிபெற்று வாழுங்காலமும் இனி உண்டாயிருக்குமோ? என்று பற்பலதாவந்த வார்த்தைகளைச் சொல்லி முறையிட்டுக்கொண்டகாலையிற் பரந்தாமன் மகபதியின் துன்பத்திற்கு இரங்கி ஓ! தேவராஜனே! லோககாரணரான குமாரதேவர் பெருமைகளையும் வீரபராக்கிரம உத்தண்டங்களையும் எவ்வளவுந்தெரியாதவனைப் போலக்கிலேசித்து வருந்துகின்றாயே? அக்குழந்தை வேலன் காலமாகவும் அதைக்கடந்த பொருளாகவும் விளங்குவன். சராசரப்பிரபஞ்சங்களைப் படைத்தும் அவற்றின் வினைகளுக்குத் தகுந்தநன்மை தீமைகளை ஊட்டி ஆட்டி உறக்குங்காரண பூதமாகவும் தோற்றுவான். அவற்றுட் படாமற் புறம்பிலும் உலாவுவான். இன்னும் அக்கடவுளுடைய மகிமைகள் முழுதும் யாவராற் கணித்துரைக்கக் கூடும்! தீனதயாளுவாகிய இந்தக்குமாரசுவாமி யானவர் பகைவரை நாசஞ்செய்யத் திருவுள்ளத்தில் நினைத்தாராயின் நிமைப்போதிற் சிறுநகையாலாவது கோபக்கனலாலாவது சொல்வன்மையினாலாவது அதப்படுத்தும் சாமார்த்தியத்தைப் பெற்றவர். மேலும் பாலப்பருவத்திற் சூரியசிறுவிளையாடலினும் சாம்பலாக்கும் திறமுடையவர். இத்தகைய மகிமைகளை உடைய பாலசுப்பிரமணிய தேவர் நமது பங்கிலிருக்கும் போது என்னகுறைவு நமக்கு உண்டாயிருக்கும்? இந்திரனே! நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை. இந்தச் சூரனைச் சற்றுநேரத்தில் இப்பெரிய சயினியங்களுடன் வாட்டிவிடும் வடிவேலரின் திறங்களை நீ பார்க்கலாமென்று அவனைத் தேற்றியகாலையில் தேவராஜன் உற்சாகமாயிருந்தனன். இவர்கள் கருத்தை எமதிறைவன் தெரிந்து சிறுநகைகொண்டு சண்டைக்கு ஆயத்தப்பட்டவராய் வருகின்றபோது இராட்சதப்படைகள் வீராவேசங்களுடன் அண்டங்கள் அதிரக்கொக்கரித்துக் கொண்டு மேலிட்டுச் சண்டை தொடங்குவதாயின. அப்போது பயந்திருந்த பூதப்படைகள் அதிகக்கெலிப்புடன் பகைவருடன் சற்று நேரம் போராடித்தாபரித்து நிற்கக்கூடாமல் முறிபட்டோடி மறைந்தன. அதனைச் சேனைத்தலைவர்கள் கண்டு உருத்திராகாரமாகச் சீறி இராட்சத வீரர்களுடன் எதிர்த்துப் பலவாறாய்ப் பாணவிதங்களைப் பிரயோகித்தும் யாதொரு பிரயோசனத்தையும்

பெருமற் சத்துருக்கள் போருக்கஞ்சி மானம் அழிந்து மதிகெட்டுத் தங்கள் பராக்கிரமங்கள் அனைத்தையும் பறிகொடுத்துப் பின்னிட்டனர். அப்போது வீரர்களாகிய இலட்சரும் எண்மரும் அதி உக்கிரத்துடன் ஒருமுகமாய்க் கலந்து தமது கொடிய பாணவிதங்களைச் செலுத்திக் கொடிய சண்டைகளைச் செய்து தங்கள் மனமும் தேகமும்வருந்திப் பகைவரைச் சற்றும் அசைக்கக் கூடாமல் அவர்களாற் படாதபாடுகளைப் பட்டு மயங்கி மடங்கிப்போயினர். அந்த அபஜெயத்தினைக்கண்ட வீரவாகுதேவர் தயிரியமாக முன்வந்து தமது சரங்களை அமோகமாகச் செலுத்தி ஆயிரங்கோடி சமுத்திரவெள்ளத்தில் ஒருமலை விழுந்து கலக்குமாறு போலச்சற்றுநேரம் சிலராக்ஷதர்களைக்கொன்று பின் தமது கைகால் ஓய்ந்து வில்லுந் தளர்ந்து பிரமித்துப் பாதகரைக் கொல்ல நம்மாலாகாதென்று மனவாட்டத்துடன் திரும்பிப் பாலசுப்பிரமணிய தேவருக்கருகில் வந்து நின்றுவிட்டனர். அத்தருணத்திற் சூரன் நால்வகைச் சேனைகளும் ஆலகால விஷமானது பெருகி உலகங்களனைத்தையும் வளைந்து கொண்டதைப் போல இரைச்சலிட்டு மேலேறிக்கொடிய போர்த்தொழிலை வெகு வெகு வேடிக்கையாகச் செய்து வீறிவரும் அதிசயங்களை எமது பாலசுப்பிரமணிய தேவர் கண்டு சிரித்துத்தமது பருத்தவில்லை எடுத்து நாட்டி வளைத்துக் குணத்தொனி செய்தனர். அக்காலத்தில் எழுந்த பேரொலியானது இராக்ஷதர்கள் செவிகளிற் பட்டமாத்திரத்தில் மனங்கலங்கித் தங்கள் கரங்களிற் பற்றியிருந்த படைகளை நழுகவிட்டு திப்பிரமை கொண்டவர்களாய் நின்றார்களென்றால் அக்குணத்தொனியின் மகிமைகளை நாம் என்னஎடுத்துப் பேசப்போகின்றோம்! இத்தகைய கடவுளுக்கு அடிமைத்திறம் பூண்டவர்களுக்கு எவ்வித இடர்கள் தாம்வந்தும் என்ன செய்யக்கூடும்? எதற்குத்தான் அந்த அடியார்கள் யோசித்துப் பயப்படக் கூடியதாயிருக்கும்? தம்மை அடுத்த தீனர்களை உத்தேசித்து யாவராலும் வெல்வதற்குக் கூடாமலிருக்கும் இந்தச் சூரனாதியரை வாட்டவோர் குணத்தொனியைக் கிளப்பிய உத்தண்ட வீரபராக்கிரமக் கடவுளாகிய ஒப்பற்ற இந்தப்பாலருடைய கிருபைக்கு எந்தப்புண்ணிய சிலர் பாக்கிய முடையவர்களா யிருக்கின்றார்களோ அவர்களே யாவரிலும் பெரியவர்களென்பது நிச்சயம். ஆகையினாலே கலியுகவரதராகி யென்றுந் தமது பக்தர்களிடத்தில்

மெய்யாகவற்புதத்திருவிளை யாடல்களைப்பெருங்கருணையுடன் செய்து காட்டிக்கொண்டே வரும் பரப்பிரமசொரூபியாகிய நம் சிவபிரான் திருக்குமாரரிடம் யாவருந்தங்களை யொப்புக்கொடுத் திகபரசாதகங் களை வருத்தமின்றி இலகுவாக வடைந்துய் வதே மிக மிகவவசியம்.

இவைநிற்கக் குமாரதேவரானவர் தமதொப்பற்ற வில்லினிடத்திருந்தும்உடனே பாணகோடிகளை யூழிமேகங்களைப்போல்அமோகமாச் சொரிவதாயினர். அவைகள் பேரிரைச்சலிட்டு மகா மகிமைகளுடன் பூமண்டலம் வானவெல்லைஅஷ்ட திசைகள் மற்றப்புவனங்களெங்கணும் நெருங்கிச் சூரனது சதுரங்க சேனைகளையும் வளைந்துகொண்டு சத்த சாகரவெல்லையினும் அவைகளிடையிற்பட்ட தீவுகளெங்கும் அடைந்திருக்கின்ற சேனைப்பெருக்குகளையுஞ் சுற்றிச்சுற்றிஅதிவேகங்கொண்டு தாக்குகின்ற காலையில் அவுணச்சேனைகள் தப்பிப்பிழைக்க வகையில்லாதபடிக்கு அவைகளையெல்லா மொன்றொழியாமற்சங்கரித்து இரணக்களமெங்கும் பிணராசிகளாகக் குவித்தவைகளினின்றும் உதிரப்பிரவாகம் பெருகிக்கருங்கடலையு மீறிச்செங்கடலாக்கி விட்ட நம் சுப்பிரமணியக்கடவுளினுடைய விற்போர்மகிமையை நாமிங்கெவ்விதமெனவெடுத்துப் பேசக்கூடியதா யிருக்கின்றது! இவையன்றியுஞ் சண்முகக்கடவுள் தூண்டுங்கொடியவாளிகளானவை அதிசவுயரத்தில் விளங்குகின்ற பொன்னுலகத்தினும் பிரமன் விஷ்ணுலோகங்களினும் அண்டவெல்லை கள்தோறும்போயத்திரிந்த விதங்களை யென்னவிதமெனப் புகழப்போகின்றோம்? மகிமைகளுள்ள வப்பாணங்களுலை கங்கண்முற்றுகிரம்பியகாலத்திலிராக்கதர் முதலிய சண்டாளர் களையன்றி மற்றவுத்தமர்களை நாசப்படுத்தித் துன்பஞ்செய்ய வில்லை. கந்தசுவாமியினுடைய வற்புதப் பாணப் பிரயோகத்தா லிவ்விதங்களாக வெங்கும் விசாலித்துப் பரந்திருந்த சூரன் படைகளின் றோற்றஞ் சற்றுநேரத்திற் காணாமல் வெள்ளிடமாகிய வதிசயத்தை விஷ்ணுவாதி தேவர்கள் கண்டற்புதசித்தரா யடங்காத ஸந்தோஷத்துட னானந்தக்கண்ணீர் பொங்கச் சரவணபவ னளவுக்கடங்காத பெருமைகளை நினைந்து நினைந்தக்குமாரரைப் போற்றிக் கொண்டிருந்தார்கள். நவவீரரிலட்சர் படைத்தலைவர் பூதர்களுந் தங்கள் பயங்களை யொழித்ததிகமகிழ்ச்சியுடன் தம் தேகங்கள் பூரிக்கக்குமாரசுவாமியைக் கிட்டிவந்து தெரிசித்துப் போற்றிச் சூழ்ந்தனர்.

அப்போது சூரன் கட்டளைப்படிக்கு மேல் அண்டங்களினின்றும் வந்து நெருங்கிய சதுரங்கசேனைகள் மண்விண் எங்கும் இடமின்றி நிறைந்து அண்டவாயில்கள் மூடப்பட்டு அவைகளுக்கு வெளியே பெருக்கெடுத்துத் தேக்கிக்காலம் பார்த்துத் தங்கியிருந்த மற்றச் சதுரங்கசேனை வெள்ளங்கள் முன் சென்ற சயினியங்கள் அதப்பட்டதைஅறிந்து ஆகாயகங்கையானது கீழ்நோக்கி வருமாறுபோலப் பூமண்டலத்தில் வந்து முன்னிலும் பதின்மடங்கு அதிக நெருக்கமாக எத்தலங்களிலும் எள்ளிட விடமில்லாமல் அட்டகாசங்களைச் செய்து வந்து கூடிச்சூரனைக்கண்டு சேவித்துத் தம்மவர்கள் நாசப்பட்டதைக் குறித்துப்பரிபவப்பட்டுப் பகைவன்விருப்பை நிமைப்போதில் அடக்கிப்பூதர்களையும் சாப்பிட்டுவிடுகிறோமென்று பற்பலசபதங்களைப்பேசிக்கோடி சூரியர் தோற்றம்போல் விளங்கியிருக்கும் குழந்தை வடிவேலரிடம் திரும்பி வந்து எமது சிவகுமார சுவாமியைக் கண்டு அதிபாலனாக இருக்கப்பட்ட இவனோ இத்தலமெங்கும் நிறைந்திருந்த நம்மவருடைய சதுரங்கசேனைப் பெருக்கனைத்தையும் சற்று நேரத்தில் மாய்க்கும் திறமை பெற்றவன்! இது வெகு அதிசயமென்று பேசிக்கொண்டு சூரியனை மூடிய பனிப்படலத்துக்கு ஒப்பாக நமது சுயஞ்சோதிக்கடவுளை வந்து சூழ்ந்து கொண்டு உருத்திராகாரமாக அவர்கள் போர்த்தொழிலைச் செய்ய எத்தனித்த காலையில் தேவர்களும் நவவீரர்கள் யாவரும் பயப்பீதியினால் வருந்தியிருக்கின்ற தனைக்குமரகுருபரன் கண்டு சிறுநகை செய்து தமது சாரதியை நோக்கிச் சூரன் படைகள் மிகுத்துக்காட்டும் தலங்கள் தோறும் நமது தேரை வட்டாகாரமாகச் சுழற்றி வரக்கடவையெனப் பணித்தனர். அவன் மகாசாமர்த்தியத்துடன் இரதத்தைத் திருப்பி அவ்வவ்விடங்கள் முற்றிலும் மின்னலைப்போலச் செலுத்துவதாயினான். அந்தத்தெய்வீகம் பொருந்திய இரதமானது கண்ணிமை கொட்டுவதன் முன்னம் பளிச்சுப்பளிச்செனத் தோற்றப் பூமண்டலம் முழுதும் வட்டணைவந்தும் திசாதிசைகளுக்கப்புறம் ஓடியும் வானவெல்லையை வலம் வந்தும் சத்த சாகரப்பரப்பினும் அவற்றினிடையிற் பட்ட தீவுகளிலும் மற்றத்தலங்களெங்கும் கறகறெனச் சுழன்று சுழன்று திரிவதாக வருகின்றபோது குமாரதேவர் தமது வில்லினின்றும் அதிகக்கொடுமைகளுடைய பாணகோடிகளை ஒவ்வொரு தொடையில் ஆயிரக்கோடி

கோடா கோடிக்கணக்கிற் சொரிந்து சூரனுடைய நால்வகைச் சேனைகள் அனைத்தையும் சின்னபின்னம் செய்தகாலையிற் பற்பல விதங்களாக மாண்டு குவிந்த இராட்சதப் படைகளின் மிகுந்த சுமையைப் பொறுக்கமாட்டாமற் பூமிதேவியானவள் தத்தளிக்க அதைத்தாங்கியிருக்கும் ஆதிசேஷன் பணாமகுடங்களும் நெக்குவிட்டு விழிகள் பிதுங்கி விஷங்களைக்கக்கிப்படாத பாடுகளைப்பட்டான். அக்காலத்தில் உதிரப் பிரவாகமானது பிரளய வெள்ளத்தினும் மேலிட்டெழுந்து அலைகளைவீசி ஆர்ப்பரித்துக் கடலை எதிர்த்துக்கொண்டு ஓடியது. அப்போது இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் முதலானவர்கள் பிரமித்து அம்மம்ம இதென்ன அற்புதமாகவிருக்கின்றது! எமது இறைவனுகிய சிவகுமாரன் காண்டீபத்திலிருந்து வெளிப்படும் சரங்களின் விரைவைப் பார்க்குமிடத்துக்கரவேகத்தையோ வாயுவேகத்தையோ மனோவேகத்தையோ எதனை முந்திப்பேசலாகு மென்றுபெரும் அற்புதத்தைக் கொண்டு புகழ்ந்தனர்.

இப்படியிருக்கும்போது மற்றைய அண்டங்களில் அடைபட்டிருந்த சயினியங்கள் பிரளய வெள்ளத்தினும் மேலிட்டு இரைந்து வந்தெதிர்த்துப் பலவகைக்கொடிய அஸ்திரசஸ்திரங்களைச் சோனைமழையைப்போலச் சொரிந்து சொரிந்து வாதாடி வருகின்றதைச் சிவசுப்பிரமணிய தேவர்கண்டு அதிகக் கோபங்கொண்டவராய்த் தமது தீட்சண்யமுள்ள கொடிய பாணகோடிகளை அமோகமாகப் பிரயோகித்து அவர்களைக் கண்டதுண்டமாகக் கண்டித்து வாட்டிய போதினும் மீட்டும்மீட்டும் அவர்கள் மாரிகாலத்திற் புற்றிளிடத்திலிருந்து திரளாய்வரும் ஈசலினது பெருக்கினும் அதிகரித்துப் பெருத்து வந்து வந்து போராடுவதை எமது கர்த்தன் நிதானித்து அதனை நிறுத்துவதாகத் திருவுள்ளத்தில் எண்ணித் தமது சரமாரிப் பெருக்கினல் அண்டவாயில்களை அடைத்ததுமல்லாமல் தம்மாற் கண்டிக்கப்பட்ட கிணமாமிசாதிகள் உதிரப்பிரவாகத்திற் கலந்துபோக இடமில்லாமல் அலைந்து தேக்குவதையும் பிணமலைகளாதியானவை ஓங்கி விண்ணகம் வரையில் மூடநிற்பதையும் அவைகளால் நவகிரகங்கள் வானவழிச் செல்லக்கூடாத விதத்தையும் பிராணிகளுக்கு உண்டாயிருக்கும் மனவருத்தங்களையும் தெரிந்து தமது தாதையைப்போலச் சிவசுப்பிர

மணியக் கடவுளானவர் தமது செந்தாமரைத் திருவிழிகளினுற் சற்று
கோபங்கொண்டு பார்த்தகாலையில் அதினின்றும் மீறி எழுந்த தீப்பட
லமானது தாக்குறுதலாற் சடசடத்த தொனிகளுடன் பிணமலைகள்
முதலானவை தகிக்கப்பட்டு நீறுய்ப்பூமியில் அடங்கவும் உதிரவாரி
யானது சுவறிமறைந்து திரிலோகங்களிற் பெருத்திருந்தலால் நாற்றம்
நீங்கிச் சீவராசிகளனைத்தும் தாங்கள் பட்டிருந்த சஞ்சலங்களைப்
போக்கிக்களித்துச் சிவகுமாரன் பெருமைகளைப்புகழ்ந்து வாழ்த்தின.
இப்படி நிமைபோதிற் கொளுத்தி நீறுக்கி மறைத்த வடிவேலரான
வர் இவைகளின் மத்தியில் நின்ற சூரனை மாத்திரம் வாட்டாமல் விட்
டதை யோசிக்குமிடத்தில் இது வொரு திருவிளையாடலாகத் தோற்
றுகின்றதென விஷ்ணுவாதி தேவர்கள் அதிசயித்துச் சுவாமியை
வாழ்த்தினர். அத்தருணத்திற் சூரன் இந்த அனர்த்தங்களனைத்தை
யுங்கண்டு அதிசயித்து நமது பகைவனையும் அவனைச்சேர்ந்த வீரர்க
ளையும் நிர்மூலப்படுத்தித் தேவப்பயல்களை அலைத்துச் சிறையிற் சேர்
க்கும் படிக்கு நானொருவனே சற்றுநேரத்திற் செய்து முடிப்பேனெ
னநினைத்துக் கோபாக்கினிமேலிட்டுத் தன்தேகத்தையும்மனத்தையும்
வாட்ட விழிகள் சிவந்து தீப்பொறிகளை யிறைக்கவடவைபோற் சீறி
த்தன் தேரைத் துரத்திக்கொண்டு பூதர்கள் மேற்கவிந்து வரும்போ
துவாயுதேவனும் சண்முகப்பெருமான் தெய்வீகத் தேரைமுடுக்கி
அவுணர் பெருமான் முன்புவரும்போது சுவர்னமயமாக விளங்கியிரு
க்கின்ற இரதத்தின் மத்தியிற் சரவணபவன் ஞானசூரியன் தோற்றத்
தைப் போல விளங்கிக் கொண்டிருக்கும் திருமேனியினது வனப்
பையும் சிரோரத்தின மயமாய்ச் சொலித்திருக்கும் வயிரமுடிகள் கவி
ந்தசண்முகார விந்தங்களின் பொலிவையும் துவாதசாதித்தர்களுக்
கொப்பாக விளங்கியசைகின்ற பன்னிருமகர குண்டலங்கள் துலங்
கும் செவிகளின் கோலத்தையும் கிருபைக் கிருப்பிடமாகிய குளிர்ந்த
பார்வையைப் பரப்பும் விழிகளின் குணாதிசயங்களையும் நவரத்தினமய
மாகச் சோடித்திரா நின்றவாகுவலயங்களைச் சூடிப்பருவதா கிருதியா
கத்திரண்டு காட்டும் புயங்களின் காட்சியையும் ஆசானு பாகுவாய்
நீண்டிருக்கும் திருக்கரங்களின் தோற்றத்தையும் அவற்றினிடத்தில்
வெற்றி வேலாயுத முதலிய படைகளின் விளக்கத்தையும் வீரபராக்
கிரம வுத்தண்டங்களையும் மற்றுமிராநின்ற சிறப்புகளையும் இராஜாதி
ராஜனனவன் தன்எதிரில் நேராகத்தெரிசித்தபோதினும் பிராரத்துவ

வினையிற் சம்பந்தப் பட்டவனுய்ப் பூர்வத்தில் தக்கப் பிரஜாபாலகன் தனக்குச் சகலசெல்வங்களையுங் கடாக்ஷித்தபரமனை மதியாமல் இகழ்ந்து சிவதண்டனைக்கு ஆளாகி மயங்கியதைப்போலச் சூரன் பால சுப்பிரமணிய தேவரைப்பார்த்து இதனைச் சொல்லுகின்றுன். நாம் பலநாட்கள் தேகமும் மனமும் வருந்தி அரியதவங்களைச் செய்ததைக்குறித்துச் சடாமண்டல தாரிபாகிய சிவபிரான் நமக்கு கொடுத்திருக்கின்ற வரங்களின் முயற்சியினுற் சலனமற்று இக்காயத்துடன் எக்காலத்தும் இருக்கவல்லோம். மகாவிஷ்ணு முதலிய தேவர்கள் கனவிலும் நம்முடன் பகைக்க நினையார்கள். இஃதன்றியும், இதுவரையில் நம்முடன் சண்டை கொடுத்தவர்கள் இறந்ததல்லது பிழைத்துத் திரும்பினவர்கள் யாவருமில்லை. அப்படிக்கு மாண்டவர்களைக் கணித்துச் சொல்லவும் போதுமோ! இவ்வித ஜெயப்பிரதாபங்களை நாம் பெற்றிருப்பது உனக்குத்தெரியாதோ? கேள்விப்பட்டது மில்லையோ? நமது பணிவிடைகளைச் சிரசாகவகித்து நடந்து வந்து இப்போது கள்ளனைப் போல ஒளிந்து திரியும் இந்திரனுதி தேவர்கள் ஏதோசில காரணங்கள் சொல்லியதை நீ சிறுபிள்ளையாதலால் மெய்யெனக் கருதிமுன் பின்யோசித்துப் பாராமல் மேலிட்டுவந்து சேற்றினிடத் தகப்பட்டுக் கொண்டு வெளிவரவகையறியாமற் சிக்கி விழிக்கும்யானைக்கன்றைப்போலத் திகைக்கின்றனை. மேலும் பெரும்புறக்கடலினும் மேலிட் டடர்ந்திருந்த எமது நால்வகைச் சேனைப் பெருக்களைத்தையும் சற்றும் இரக்கமற்றுக் கொன்றது மன்றி இரண்டு புஜங்களைப் போல எனக்கு இருந்த துணைவரையும் என் சௌரியபராக்கிரமங்களையும் மதித்துப்பாராமல் உனது வேலினுல் எறிந்தாய். அல்லாமலும் நமது மனம் வருந்தி வாடும்படிக்கு ஜெயசாலிகளாகிய பிள்ளைகளையும் சேனைத்தலைவர்கள் மந்திரி பிரதானிகள் வர்க்கங்களைக் கொல்லுவித்தனை. இக்காரணங்களை நினைக்க நினைக்க எமக்குச் சோபமேலிடுகின்றபடியால் நமது கோபதாபங்கள் தணியும்பொருட்டு உன்னை அதப்படுத்துவதன்றி நீ அதிபாலகனென்று நாம்விட்டுவிடுவோ மென்று எவ்வளவும் நினைக்கவேண்டாம். புறந்தந்து ஓடியபோதினும் பழிபாதகத்திற்கு அஞ்சாமல் தொடர்ந்து திகைக்கும் படிக்குச் சாடுவதன்றியும் உனக்குப் படைத்துணையாக வந்து சூழ்ந்திருக்கின்ற தூதன் முதலாகிய வீரரை யெல்லாம் அதாகதப்படுத்திப் பூதரென்னும் பேரில்லாமல் உன்சயினியங்களைச் சாம்பலாக்கி உனக்கு மந்திரலோசனைக்